பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 10 செவ்வாய்க்கிழமை (24.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 095

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# புதிய அரசின் ஆட்சிக்காலத்தில் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு

## வளலாயில் ஜனாதிபதி உறுதியளிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு பாரதூரமான பிரச்சினைகள் உண்டு என்பதனை ஏற்றுக்கொள்கிறோம். புதிய அரசின் ஆட்சிக்காலத்திற்குள் தமிழ் மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

நாட்டில் நடைபெற்ற யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்புகள் வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் கொழும்பிலும் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள வளலாயில் 400 ஏக்கர் அளவு காணியினை பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக்காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மூன்றுமாத காலட் பகுதிக்குள் யாழ்ப்பாணத்திற்கு மூன்று தடவைகள் நான் வந்துள்ளேன்.

முதலாவது தேர்தல்காலத்தில் உங் 23ஆம் பக்கம் பார்க்க....

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட்டமைப்புக்கு கிடைக்கும்

### ஹெல உறுமய சீற்றம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைக்கும் என பிவித்துரு ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரான மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அப்படி நடந்தால், சர்வதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகளுக்கு கூடுதலான அங்கீகாரம் கிடைக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அந்த பதவி கிடைக்காவிட்டாலும் தமிழர்கள் என்பதால், தமக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வில்லை எனவும் சர்வதேசத்திற்கு செய்திகளை கொண்டு செல்ல 24ஆம் பக்கம் பார்க்க....

## அம்பலத்துக்கு வந்தது ரணில்-விக்கி நிழல் யுத்தம்

(கொழும்பு)

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குமிடையில் இதுவரையில் இடம்பெற்றுவந்த நிழல் யுத்தம் நேற்றையதினம் அம்பலத்திற்கு வந்தது.

இந்தநிலையில் இருவரும் பொது நிகழ்வில் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளாமலும், பேசிக் கொள்ளாமலும் இருந்ததை காண முடிந்தது.

நேற்றையதினம் யாழ்.வளலாய் பகுதியில் மக்களுடைய காணிகளை மீள கையளிக்கும் நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முதலமைச்சர் ஆகியோர் சென்றிருந்தனர்.

இதன்போது பிரதமர் வரும் போது முதலமைச்சர் வரவேற்கும் இடத்தில் நின்றிருந்தார். எனினும் பிரதமர் அதனைக் கவனிக்காது விலகிச்சென்றார்.

அதனைப்போல, முதலமைச்சரும் அவரை வலிந்து வரவேற்காமல் விலகியே நின்றுகொண்டார். பின்னர் மேடையில் ஏறிக் கொண்ட போதும் நடுவில் ஜனாதிபதி உட்கார்ந்திருக்க முதலமைச்சரும் பிரத 24ஆம் பக்கம் பார்க்க....

## ரயில் மோதிய மாணவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

நீராவியடி முதலாம் ஒழுங்கையில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையை சைக்கிளில் கடக்க முற்பட்டவேளை ரயிலில் மோதுண்டு படுகாயமடைந்த யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த பெப்ரவரிமாதம் 19ஆம் திகதி யாழ்ப் 23ஆம் பக்கம் பார்க்க....

## ரணிலுக்கு அறிவுரை கூறினாரா விக்கி?

(யாழ்ப்பாணம்)

சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ போன்று இலங்கை அரசியல் தலைவர்களும் பேசவேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மறைமுகமாக அறிவுரை கூறினார்.

வளலாயில் காணி விடுவிக்கும் நிகழ்வு நேற்றையதினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு அறிவுரை வழங்கியுள்ளார்.

இவ் அறிவுரையினை அவர் சிங்களத்திலும் தமிழிலும் ஆற்றியிருந்தார். அண்மையில் கட்சிக் கூட்டமொன்றில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றியிருந்தார் அப்பேச்சு அனைவரும் ஏற்றுக் கொள்ள கூடிய 23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு கிழக்கின் சுதந்திரமே மகிந்த தோல்வியடைந்தார்

### கோத்தபாய ராஜபக்ஷ செவ்வி

(கொழும்பு)

30 வருடகால யுத்தத்தை வெற்றிக்கு கொண்டு வந்து வட,கிழக்கிற்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தின் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார் என முன்னாள் பாதுகாப்பு பொது செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



ஆங்கில ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ் 24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலைவாய்ப்பு

வைத்திய நிலையம் ஒன்றுக்கு பயிற்சி பெற்ற தாதியும், பயிற்சி பெற விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும். ஓய்வுபெற்ற தாதி ஒருவரும் தேவை. (பகுதி நேரமாகவும் வேலை செய்யலாம்)

**தொடர்புகளுக்கு:-0778730129**
(9877)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

ஒன்றரை மாத வயதுடைய பொம்மனேரியன் நாய்குட்டிகள் விற்பனைக் குண்டு. பூச்சி அகற்றப்பட்டது. உடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு:-0775924818**
(9880)


# தேசியகீதம் தமிழில் இசைப்பதற்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மட்டுமே பாட வேண்டும் என சிங்கள தேசிய முன்னணி தெரிவித்துள்ளது. அக்கட்சியின் ஏற்பாட்டில் நேற்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்ற கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சொற்ப அளவான பிரதிநிதிகள் சமுகமளித்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், சிங்கள தேசிய முன்னணியினரால் துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது. அதில், இந்தியாவில் 200 இற்கு மேற்பட்ட மொழிகள் இருந்தாலும், பெங்காளி மொழியிலேயே அவர்களின் தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது.

தேசிய கீதத்தை தமிழில் பாடக் கூடாது. இலங்கையின் பிரதான மொழியான சிங்களத்திலேயே பாடவேண்டும். இன்று தமிழில் தேசிய கீதத்தை இசைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டால், நாளை முஸ்லிம்கள் அரபு மொழியிலும் பாட வேண்டும் என்று கேட்பார்கள் என்றிருந்தது.

அத்துடன், ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தேரர் ஒருவர் கருத்துரைக்கையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சொந்த புத்தியில் இயங்க வேண்டும். அடுத்தவர்களின் கதைகளைக் கேட்டு செயற்படக்கூடாது. எனவும் தெரிவித்தார். (எ-11)


## விற்பனைக்குண்டு

மில்லில் பயன்படுத்தப்படும் அனைத்து வகையான பொருட்களும், அரைக்கும் இயந்திரங்களும் விற்பனைக் குண்டு.

**தொடர்புகளுக்கு :- 0777818510**
(9871)

## வேலை ஆட்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு நீர் கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை. மாதவேதனமாக ரூபாய் 27, 000/- வழங்கப்படும். இலவச தங்குமிட வசதி உண்டு. ஆண்கள் மட்டும். வயது 18-25 வரை

தொடர்பு:

**கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்**
11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 3857
(9879)

SARAVANA
சரவணா புடைவையகம் Texs

## வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்

இல :- 770,772, கே.கே.எஸ் வீதி (குட்டாதெருச்சந்தி) எனும் முகவரியில் இயங்கி வந்த சரவணா ரெக்ஸ் 526, 529 பருத்தித்துறை வீதி நல்லூர் எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

மேற்கூறியது போல் இல.770,772, கே.கே.எஸ் வீதி எனும் முகவரியில் கணபதிப்பிள்ளை விமலதாசன் ஆகிய எனக்கு சொந்தமான சரவணா ரெக்ஸ் ஸ்தாபனத்தில் நீண்ட காலமாக காசாளராகக் கடமையாற்றிய சூரியகுமார் கயூரன் மற்றும் ஸ்தாபனத்தின் வங்கி சார்ந்த விடயங்களில் உதவியாளராகவும், வெளிக்கள உதவியாளராகவும் கடமையாற்றிய மகாலிங்கம் அந்திவண்ணன் ஆகிய இரண்டு ஊழியர்களும் எனது வியாபார ஸ்தாபனத்தில் இருந்து விலகி விட்டார்கள். எனவே எனது வியாபார நிலையத்தின் நீண்ட கால வாடிக்கையாளார்கள் சரவணா ரெக்ஸ் ஸ்தாபனத்துக்கு தரவேண்டிய கொடுப்பனவுகளை நல்லூரில் உள்ள எனது ஸ்தாபனத்தில் நேரடியாகக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் மேற்குறிப்பிட்ட இந்த இரண்டு நபர்களிடம் சரவணா ரெக்ஸ் சார்ந்த எந்த ஒரு கொடுக்கலையும் மேற்கொள்ள வேண்டாம். எனவே மேற்கொள்ளும்பட்சத்தில் எனது ஸ்தாபனம் அதற்கு பொறுப்பு அல்ல என்பதை உறுதிப்படத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உரிமையாளர்
(சி-445)



உ
ஜெய்குருதேவ்

## புத்துணர்வுப் பயிற்சி

வாழும் கலைப் பயிற்சி எடுத்தவர்களுக்கான சுதர்சனக் கிரியா, யோகா, ஆன்மீக விடயங்கள் உள்ளடங்கிய புத்துணர்வுப் பயிற்சி வாழும் கலை ஆசிரியர் சாயிராம்ஜி (இந்தியா) அவர்களால் வழங்கப்படவுள்ளது.

காலம் :-29.03.2015 ஞாயிறு
காலை 7 மணி - பி.ப 3 மணி வரை
இடம் :-புனித கீரிமலை சிவபூமி ஆச்சிரமம்

வெள்ளிக்கிழமைக்கு முன்பாக பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :-
0776655408, 0777607008, 0770204726 0779152615

**வாழும் கலை அமைப்பு**
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-446)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



04.04.2014 வெள்ளிக்கிழமை
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர்
**திருமதி செல்வராசா ஈஸ்வரி (றோகினி)**
அவர்களின்

1 ஆம் ஆண்டுக் கிரியைகள் 24.03.2015 இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணி தொடக்கம் 3.00 மணி வரை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.26, அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (9868)

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி முறைமைக்கு எதிராக மீண்டும் போராட வேண்டிவரும்!

## விக்ரமபாகு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்யுமாறு மீண்டும் போராட்டம் நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டு ள்ளதாக புதிய இடதுசாரி கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.**



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முழுமையாக இரத்து செய்வதாக வாக்குறுதி அளித்து பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன, தற்போது நிறைவேற்று அதிகாரங்களை இரத்து செய்யாது, அதிகாரங் களில் திருத்தங்களை செய்ய முயற்சிக்கின்றார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட சில கட்சிகளின் அழுத்தங்களுக்கு ஜனாதிபதி அடி பணிந்துள்ளார். இதனால் நாட்டின் புத்திஜீவிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் அமைப்புக் கள் இணைந்து போராட்டம் நடத்தி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய நேரிட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்பட வேண்டும். எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்துவதில் தவறில்லை.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு அதிகாரங்கள் செல்லக் கூடாது என்ற காரணத்தினால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜாதிக ஹெல உறுமயவும் பிரதமர் மற்றும் பாராளுமன்றிற்கு அதிகாரங்கள் செல்லக்கூடாது என கோரி வருகின்றனர். அண்மையில் கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் விக்ரமபாகு கருணா ரட்ன இவ் வாறு தெரிவித்துள்ளார். (இ-5)

# கட்சியின் தீர்மானமின்றி சு.கட்சியினர் இணைவு

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தீர்மானங்களின்றி அதன் 26 உறுப்பினர்களும் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுள்ளனர் என முன்னாள் அமைச்சர் தினேஸ குணவர்த்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை தொடர்ந்து கொண்டு செல்ல முடியாத காரணத்தினால் அரசாங்கத்திற்கு பெரும்பான்மையை ஏற்படுத்தி கொள்ளும் பொருட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் முன்னெடுத்த திட்டமே நேற்று முன்தினம் வழங்கப்பட்ட புதிய அமைச்சு பொறுப்புக்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய அரசாங்கம் குறித்து தற்போதைய அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது என தெரிவித்த முன்னாள் அமைச்சர்,

தேசிய அரசாங்கத்திற்கு மக்கள் வாக்களிக்கவில்லை. மாறாக மக்களின் ஆணைப்படி ஒவ்வொரு உறுப்பினரும் தமது கடமைகளை செவ்வனே செய்ய வேண்டும் எனும் எதிர்பார்ப்புடனேயே மக்கள் வாக்களித்துள்ளனர் என இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# ரணிலுக்கு எதிராக தேரர் குற்றச்சாட்டு

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிளவுபடுத்துவதற்கு ஐக்கிய தேசிய கட்சி எதிர்பார்ப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிளவுபடுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெறுவதாகவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சுற்றிக்கொண்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மோசடிக்காரர்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி தண்டனை வழங்கு வதில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்தர கட்சியின் பிரமுகர்கள் சிலர் கட்சி பிளவுபடுவதனால் ஏற்படும் ஆபத்தினை அறிந்திருக்கிறார்கள், ஆனால் சிலர் இவ் ஆபத்தினை அறிந்திருக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

தற்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் உள்ள மோசமான அம்சங்களை நீக்குவதற்கு பதிலாக முன்னாள் ஜனாதிபதி வில்லியம் கோபல்லாவ போன்ற ஒருவரை நியமிப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய ஒன்றுபடாதென அத்துரலிய ரத்ன தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிலும் திருட்டாம்!

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் கடந்த காலத்தில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் பயிற்சி மையமொன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு நிகழ்விற்கு 126 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெசாக் தினத்தன்று பக்தி பாடல் பயிற்சிக்கு 56 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. தானம் வழங்குவதற்கு 35 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் நத்தார் தின நிகழ்விற்கு 11 இலட்சம் ரூபாய் செலவுசெய்யப்பட்டுள்ளது. கடந்தவருடத்தில் பணியக விளம்பர செலவு 362 மில்லியன் ரூபாய். எனக்கும் இவ்வாறு செலவு செய்ய முடியும். புது வருட நிகழ்வுகள் நடத்த முடியும். இவ்வளவு பணம் இங்கு வீணடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான முறைகேடுகளை தடுத்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினை சரியான வழியில் கொண்டு செல்வதற்கு இரண்டு அல்லது மூன்று மாதங்கள் போதாது என அமைச்சர் தலதா அத்துகோரள மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மக்களின் எதிர்பார்ப்பு சீர்குலைந்து விட்டது

## ஜே.வி.பி.சாடல்

அரசாங்கம் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரித்ததன் மூலம் மக்களின் எதிர்பார்ப்புகள் சீர் குலைந்துள்ளன. நல்லாட்சிக்கான எதிர்பார்ப்பும் இல்லாமல்போயுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த 26 எம்.பிக்கள் அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த 26 எம்.பி.க்கள் அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளனர். இதன்மூலம் அரசாங்கத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் மூலம் மக்களின் எதிர்பார்ப்புகள் சீர்குலைந்துள்ளன. நல்லாட்சிக்கான எதிர்பார்ப்பும் இல்லாமல்போயுள்ளது. இதனை மக்கள் எதிர்பார்க்கவில்லை.

நல்லாட்சி என்று கூறிக்கொண்டு பதவிக்கு வந்த அரசாங்கம் இவ்வாறு செயற்படுவது மக்களின் எதிர்பார்ப்பை சீர்குலைக்கும் விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சியிலிருந்து அரசிற்கு ஆதரவு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 26 பேர் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றாலும், ஏனையவர்கள் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு அரசுக்கு ஆதரவு வழங்குவார்கள் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

புதிய அமைச்சர்கள் பதவியேற்றமை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

11 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும், 5 இராஜாங்க அமைச்சர்களும், 10 பிரதியமைச்சர்களும் நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டனர். தாம் தேசிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்குத் தீர்மானித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் உள்ளிட்ட ஏனையவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளாவிட்டாலும், எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவார்கள் என அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியில் இருக்கும் அவர்கள் அரசாங்கம் விடும் பிழைகளைச் சுட்டிக்காட்டும் அதேநேரம், முக்கியமான திட்டங்களுக்கு அரசாங்கத்துக்கு ஆதரவளித்துச் செயற்படுவார்கள் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இராசி பலன்

24.03.2015

(பங்குனி 10, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு

சதுர்த்தி முற்பகல் 8.21 மணிவரை

பரணி முற்பகல் 7.32 மணிவரை

இராகுகாலம் 3.16-4.46 மணிவரை

சுபநேரம் 10.46-12.16 மணிவரை

கார்த்திகை விரதம்

வளவன்

**மேடம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும் நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்:** பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டிய நாள், கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்:** எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடிவரலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கடகம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள்.

**சிம்மம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, மறைமுக எதிர்ப்புகள் மாறும்.

**துலாம்:** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், மறதியால் ஒரு சில பணிகள் தவறலாம், சேமிப்புகள் கரையக்கூடிய வாய்ப்புண்டு, சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**விருச்சிகம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர்.

**தனுசு:** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், வியாபார விரோதம் விலகும்.

**மகரம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள் எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, வாகன சுகமுண்டு சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மீனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சில திருப்பங்களைக் காணலாம், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்திதரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

### ஆன்மீகம் 168

## பயத்தை எதிர்கொள்ளல்

...கொஞ்சம் மரணத்தைப் பற்றிய பயத்தை நீங்கள் ஆழமாக ஆராய்ந்து பார்த்தீர்களானால் மக்கள் இறப்பதற்கு அச்சப்படுவதற்குக் காரணம், அவர்கள் விழிப்பற்ற நிலையில் தாங்கள் இப்பொழுது இருப்பதைவிட வேறெங்கோ ஒரு உயர்ந்த நிலையில் இருந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் என்பது தெரியவரும். அவர்கள் வாழ்க்கையில் அடையவேண்டிய உண்மையான இடத்தை இன்னும் அடையவில்லை என்று எண்ணுவதால் இறப்பதற்குத் தயாராக இல்லை.

சிலர் தங்கள் மீது மற்றவர்களின் கண் பட்டுவிட்டதால் அவர்களால் முன்னேற முடியவில்லை என்று கருதுகிறார்கள்! உண்மை என்னவென்றால் உங்கள் கண்ணே இன்னும் சரியாக உங்கள்மீது படவில்லை. அதனால்தான், உங்களுடைய கடைசி நாட்களில்கூட உங்கள் மரணத்தைத் தாமதப்படுத்திக் கொண்டே இருக்கிறீர்கள்.

நீங்கள் சரியான முறையில் உங்கள் ஆசைகளையும் பயங்களையும் மற்ற உணர்ச்சிகளையும் ஆராய்ந்து புரிந்து கொண்டீர்களானால் எதற்காகவும் யார் மீதும் பழி போட மாட்டீர்கள்.

இதுபோன்ற சுருண்டு கொண்டிருக்கும் பயங்களற்று தங்கள் வாழ்க்கையை வாழும் மக்களால் தங்கள் இறப்பையும் வாழ முடியும். நான் முன்பே சொன்னதுபோல் சரியாக எத்தனை மணிக்கு தாங்கள் இறப்போம் என்று தங்கள் சீடர்களிடம் சொல்லி அதேபோல இறந்து வாழும் குருமார்களைப் பற்றிய கதைகள் நிறைய இருக்கின்றன.



குருமார்கள் உயிருடன் இருந்த பொழுது அவர்களது போதனைகளிலிருந்து கற்றுக் கொள்ளாததை பல சீடர்கள் தங்கள் குருமார்களின் இறப்பிலிருந்து கற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இறப்பை வாழ்ந்தார்கள் என்று சொல்லும் பொழுது நாம் சொல்வது என்னவென்றால் அவர்களால் இறப்பை அறிவிக்க முடிந்தது என்பதையும் அவர்கள் விழிப்புணர்வுடன் இறந்தார்கள் என்பதையும்தான். அவர்கள் விடயத்தில் அவர்களது இறப்பு என்பது உண்மையில் உடலை விடுவது அவ்வளவுதான்.

நாமனைவரும் மிகுந்த துன்பத்துடன் விழிப்பற்ற நிலையில் உடலை விடுகிறோம். நிறைவேறாத ஆசைகளின் இழுபறி நம்மை ஒரு பக்கம் சித்திரவதை செய்கின்றன; உடம்பு போதுமான அளவு கஷ்டத்தை அனுபவித்துவிட்டது என்று இன்னொரு பக்கம் சித்திரவதை செய்கிறது. மனமும் உடலும் பொருந்தாத தன்மை, நாம் இருக்கும் பொழுதும் இறக்கும் பொழுதும் நம்மைத் தொந்தரவு செய்கிறது. உயிருடன் இருக்கும் பொழுது நாம் நமது உடலுக்குள் நமது எல்லைக்குள் இருப்போமானால் உடலை விடும் பொழுதும் அமைதியான முறையிலேயே விடுவோம். பிரச்சினை என்னவென்றால் நாம் இருக்கும்பொழுது எப்பொழுதும் உடலுக்கு வெளியிலேயே இருக்கிறோம்; ஒருபோதும் உள்ளே இருப்பதில்லை.

இதை உங்களுக்கு விளக்குகிறேன்....

உங்கள் வாழ்க்கை முறையை வெறுமனே ஆழமாகப் பாருங்கள். காலையில் பல் தேய்க்கும் பொழுது என்ன செய்கிறீர்கள்? வேலைக்குச் செல்வதைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விடுகிறீர்கள். வேலையில் இருக்கும் பொழுது வீட்டிற்குச் செல்வதற்கு பேருந்தைப் பிடிப்பதைப் பற்றி நினைக்கிறீர்கள். வீட்டிலிருக்கும் பொழுது அடுத்த நாள் வேலையைப் பற்றி நினைக்கிறீர்கள்! விடுமுறையில் இருக்கும் பொழுது அலுவலகத்தைப் பற்றி நினைக்கிறீர்கள். அலுவலகத்தில் இருக்கும் பொழுது விடுமுறையில் செல்வதைப் பற்றி நினைக்கிறீர்கள். உங்கள் உடல் இருக்கும் இடத்தில் உங்கள் மனம் இல்லையென்று நிச்சயமாகச் சொல்ல முடியும்!

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி




### தாக்குதலில் பலியான நபர்:
### 14 வருடங்களுக்கு பின் அடையாளம் காணப்பட்ட அதிசயம்

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரத் தாக்குதலில் பலியான நபர் ஒருவரின் அடையாளங்கள், தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் (Newyork) நகரில் உள்ள இரட்டைக் கோபுரம் மீது அல்கொய்தா தீவிரவாதிகள் நடத்திய விமான தாக்குதலில், சுமார் 3 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.



இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை அடையாளம் காணுவதில் சிரமம் ஏற்பட்டதால், சில உடல்கள் மரபணு சோதனையின் மூலம் அடையாளம் காணப்பட்டன.

இத்தாக்குதல் நடந்து கிட்டத்தட்ட 14 வருடங்கள் ஆன நிலையில், தற்போது அதில் பலியான ஒருவரின் உடல் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்நிலையில் இது தொடர்பாக நியூயோர்க் மருத்துவ ஆய்வாளர் நடத்திய சோதனையில், நியூஜெர்சியைச் (NewJersey) சேர்ந்த மேத்யூ டேவிட் யார்னெல் (Matthew D. Yarnell Age-26) என்ற நபரின் உடல் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவரையும் சேர்த்து இதுவரை 1640 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதேபோல், இன்னும் காணாமல் போனவர்களாகக் கருதப்படும் 1,113 பேர்களின் உடல்களும், 7,703 உடல் பாகங்களும் அடையாளம் காணப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது




## இறால் சமோசா



**தே.பொருட்கள்:**

மைதா மா- 5 கப்
நெய் -50 கிராம்
இறால் -300 கிராம்
உருளைக்கிழங்கு -300 கிராம்
கரட்-இரண்டு
பச்சைப்பட்டாணி -1/2 கப்
வெங்காயம் - 1
பச்சைமிளகாய் - 2
இஞ்சி பூண்டு விழுது -2 கரண்டி
மஞ்சள்தூள் -1 டேபிள்ஸ்பூன், உப்பு -1 கரண்டி, எண்ணெய் - 1/2 லிட்டர்


**செய்முறை:**

உருளைக்கிழங்கு, கரட், பட்டாணியை நன்றாக வேக விடவும். வெங்காயத்தை நறுக்கிக் கொள்ளவும். பச்சைமிளகாய் பொடியாக நறுக்கவும். நெய்யை சூடுப்பண்ணி மாவில் ஊற்றி நன்றாக பிசைந்து அரைகப் தண்ணீர் சேர்த்து பிசைந்து சின்ன சின்ன உருண்டைகளாக போட்டு அரைமணி நேரம் வைக்கவும். வேகவைத்த காய்களை தோல் எடுத்து உருளைக்கிழங்கை உதிர்த்து வைக்கவும். கரட்டை பொடியாக நறுக்கவும்.

ஒரு பாத்திரத்தில் 5 கரண்டி எண்ணெய் ஊற்றி வெங்காயத்தை வதக்கவும். இதில் இறாலை போட்டு அதனுடன் எல்லா தூள்களையும் போட்டு நன்கு பொரிய விடவும். இறால் பாதி வெந்ததும் அதில் வேகவைத்த காய்களைப் போட்டு 5 நிமிடம் கழித்து இறக்கி வைக்கவும். பின் ஒரு உருண்டையை எடுத்து மெல்லிய அப்பளமாக இட்டு அதில் ஒன்றரைகரண்டி மசாலா கலவையை எடுத்து அதில் வைத்து சுற்றிலும் தண்ணீர் தடவி முக்கோணமாக மடிக்கவும். இதே போல எல்லா உருண்டைகளையும் செய்து வைக்கவும். ஒரு பெரிய பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி நன்கு காய்ந்ததும் அதில் சமோசாக்களைப் போட்டு இருபுறமும் சிவக்க விட்டு பொரித்து எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







புலோலி தெற்கு உபயகதிர்காமம்

# தான்தோன்றீஸ்வர ஸ்ரீ சக்கரசண்முகதேவஸ்தானம்

புனராவர்த்தன பிரதிஷ்டா

## மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

எண்ணெய்க்காப்பு
24.03.2015 இன்று
செவ்வாய்க்கிழமை
காலை 6 மணிமுதல்
மாலை 4 மணிவரை

கும்பாபிஷேகம்
25.03.2015
காலை 6.15 மணி
முதல்
6.59 மணிக்குள்

**அடியார் பெருமக்களே!**

மூலமுதற் பொருளாய் காலப்பெருங் கணக்கை கையில் அடக்கிய கலியுகவரதப்பெருமான் பேரருள் பிரவகிக்கும் பூவுலகின் பொக்கிஷமான இலங்கை மணித் திருநாட்டின் வடபால் வளம் கொழிக்கும் தாய் நிலமான யாழ்ப்பாணத்தின் கண்ணே எழில் புலமான புலோலி கிராமந்தன்னில் உபயகதிர்காமம் என ஊர் போற்றும் பதியில் அரிய ஆன்மா லோகாம்பாளின் யோக நிஷ்டையால் அடையாளம் காணப்பெற்ற விளாமரத்தினருகில் விண்ணையும் மண்ணையும் விச்சிய மூர்த்தியான தான்தோன்றி ஸ்ரீ சக்கர சண்முகப்பெருமானின் மஹாகும்பாபிஷேக விழாவானது! ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கலகரமான ஜய வருடம் பங்குனித் திங்கள் 11 ஆம் நாள் (25.03.2015) புதன்கிழமை கார்த்திகை நட்சத்திரமும் சஷ்டி திதியும் சித்த யோகமும் கூடிய சுப தினத்தில் காலை 6.15 மணிமுதல் 6.59 மணிக்குள் அமைந்த மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில் நடைபெற இறையருள் கைகூடி இருப்பதால் 5 தினங்களாக நடைபெறும் இப்பெருவிழாவில் கலந்து சரியைத் தொண்டுகள் புரிந்து கிரியைகளைத் தரிசித்து யோகங்கள் பல பெற்று ஞானானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக!

### கிரியா கால நிகழ்வுகள்

பங்குனித் திங்கள் ஏழாம் நாள் 21.03.2015 சனிக்கிழமை காலை 6.02 மணிமுதல் 7.17 மணிக்குள் கோதுளிகா முகூர்த்தத்தில் கர்மாரம்பம் விநாயக வழிபாடு, தேவபிராம்மண சுவாமி அனுக்ஞை, தனபூஜை பத்திரிகாபடனம், நூதன மூர்த்திகள் பூர்வாங்கக் கிரியை, கணபதி ஹோமம் நவக் கிரக மகம், பிரசாதம் வழங்கல்.

பங்குனித் திங்கள் எட்டாம் நாள் 22.03.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.20 மணி சுத்திபுண்ணியாகம், மூர்த்தி, சங்ஹிதா, சாந்தி ரக்ஷோக்ன, திசா ஹோமங்கள், கிராம சாந்தி, பிரவேசபலி, வாஸ்துசாந்தி, பிரசாதம் வழங்கல்.

பங்குனித் திங்கள் 9 ஆம் நாள் 23.03.2015 திங்கட்கிழமை பகல் 11 மணி சக்தி கணபதி ஆராதனை, தீர்த்த சங்கிரகணம், சூர்யாக்னி ஆகர்ஷணம், பிரசாதம் வழங்கல். மாலை 4 மணி மிருத்சங்கிரகணம், ரக்ஷாபந்தனம் தர்மத்துவபூஜை, கடஸ்தாபனம், கலாகர்சனம் , மந்திரசாலாபிரவேசம், பேரசலனம் மாலை 4.43 மணிமுதல் 5.43 மணிக்குள் ஸ்தூபி, தீப, யந்திர பிம்பஸ் தாபனங்கள், அஷ்டபந்தனம், நிர்த்தசமர்ப்பணம், யாகபூஜை, சஹஸ்ரநாமஹோமம் பூர்ணாகுதி, பிரசாதம் வழங்கல்

**24.03.2015 செவ்வாய்க்கிழமை காலை 6 மணிமுதல் மாலை 4 மணிவரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தலாம்.**

பங்குனித்திங்கள் 10 ஆம் நாள் 24.03.2015 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி விக்னேஸ்வர பூஜை, விசேட சந்திநித்தியதுபபூஜை, சோம ஆராதனை, யாகசாலா பிரவேசம், யாகபூஜை, பாவனாபிஷேகம், விசேட திரவிய ஹோமம், ஸ்ரீசுப்பிரமணிய சத்ருசங்ஹா த்ரிசதீ நாமஹோமம் , பூர்ணாகுதி, பிரசாதம் வழங்கல்

மாலை 5 பூதசுத்தி, அந்தர்யாகம், கலச, கண்டா, தீப, சங்க கணபதி, பஞ்சகவ்ய, வருண, பஞ்சாமிர்த, ரக்ஷாசூத்திர பிம்பசுத்தி பூஜா ஹோமம் ஜபம், பூர்வ சந்தானம், யாகபூஜை, பச்சிம சந்தானம், சிவாச்சாரிய பூஷணம், பிரசாதம் வழங்கல்.

பங்குனித் திங்கள் 11 ஆம் நாள் 25.03.2015 புதன்கிழமை அதிகாலை 5 மணி புண்ணியாகவாசனம், சிவோகம் பாவனை, யாகபூஜை, அஷ்டோத்திர சதநாமஹோமம், உபசார ஹோமம் , ஜயாதி ஹோமம், மஹாபூர்ணாகுத் தீபாராதனை வேத, ஸ்தோத்திர தேவார, கீத, நாத, தாள சமர்ப்பணம்.

காலை 6.15 மணிக்கு ஸ்தூபிகள் கும்பாபிஷேகம் மயூர பூஜை, சர்வமங்கள வாத்திய சகிதம் கும்பமூர்த்திகள் வீதி வலம் , புஸ்பாஞ்சலி, ஹாராத்தி, முகூர்த்த பரீதிதானம், மஹா கும்பாபிஷேகம், திருநடை காப்பு, தேவாதிகள், குப்தபூஜை, தசமங்கல தரிசனம், சிவாச்சார்ய சம்பாவனை, ஆசீ உரை, காலை 9 மணி மஹா அபிஷேகம், விசேட பூஜை, அன்னதானம்.

### அருளாசி வழங்கும் விப்ரசதஸ்

**சிவாகமகிரியாதத்வநிதி**
சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தா
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்,
மருதனார்மடம்.

**சர்வபோதகாச்சார்யார்**
வேதாகம வித்யாபூஷணம்,
சிவாகமரத்னா
சிவஸ்ரீ சு.சிவகுமாரகுருக்கள்
(கல்வியங்காடு)
சிவஸ்ரீ கு.பிரபாகரக்குருக்கள் (மல்லாவி)

**கணேசபிரதிஷ்டா குரு**
சிவஸ்ரீ சோ.துஸ்யந்தக் குருக்கள்
ஸ்ரீ ஆலடிப்பிள்ளையார் கோவில்,
பருத்தித்துறை.

**ஸ்தானீக குருமணி**
பிரம்மஸ்ரீ யோ.நாகேஸ்வரசர்மா
துன்னாலை.

**பிரதிஷ்டாபிரதமகுரு**
"மதுரமந்திரமாமணி"
சிவஸ்ரீ குமாரசரவணபவக் குருக்கள் J.P.
இணுவில்.

**சிவாகமஞானபாஸ்கரன்**
சிவஸ்ரீ தாணுமகாதேவக் குருக்கள்
காயத்திரிபீடம்
தர்மசாஸ்தாகுருகுலம், இணுவில்.

**சாஹித்யவியாகரணச்சார்ய**
பிரம்மஸ்ரீ இரா. பாலகிருஷ்ணசர்மா
(சாரதா அச்சகம், பருத்தித்துறை)
(குமரன்நகர், வயலூர், திருச்சி)

**யாகசம்ரக்ஷகர்கள்**
பிரம்மஸ்ரீ அ.மகேஸ்வரச சர்மா (கொக்குவில்)
பிரம்மஸ்ரீ தி.பிரணவசர்மா (மீசாலை)

**உபசாதகர்**
பிரம்மஸ்ரீ வ.சுந்தரராஜசர்மா
(கொழும்புத்துறை)
சிவஸ்ரீ ர.கேசவக்குருக்கள்
(தாவடி)

**ஆன்மீக உரை**
ஞானகதாசுரபி பிரம்மஸ்ரீ
கு.சுவாமிநாதசர்மா
கவிஞர் கு.வீரசா (இணுவில்)

**சாதகாச்சார்யர்**
பிரம்மஸ்ரீ கி.கௌரிகாந்தசர்மா
பிரம்மஸ்ரீ கே.வப்பிரியசர்மா
(உசன்)

**பாக சாலை**
பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா
(துன்னாலை)

உபயகதிர்காமம்,
புலோலி தெற்கு.

**கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து வரும் தினங்களில் பகல் மண்டலாபிஷேகம் நடைபெறும்**

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

இறை தொண்டில்
ஆலய பரிபாலனசபை.

(சி-441)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 'பெண்களுக்கான சிறந்த நாடு' சர்வதேச மகளிர் தினம்-2015

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச மகளிர் தினம்-2015 பருத்தித்துறைபிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் "பெண்களுக்கான சிறந்த நாடு" என்னும் தொனிப் பொருளில் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறைபிரதேசசெயலாளர் இத.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பெண்கள் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ள அதேவேளை சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி ஜெயராஜன், பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் திருமதி சந்திர பாமா தர்மராஜா, வல்வெட்டித்துறை நகரசபை செயலாளர் திருமதி கிரிஜா வாசுதேவன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற காணி மாவட்டப் பதிவாளர் திருமதி சரஸ்வதி தியாகராஜன், ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி சிவமலர் சுப்பிரமணியம், மாதர் சங்க உப தலைவி திருமதி முருகானந்தராசா பவானி, சிறந்த பெண் முயற்சியாளர் திருமதி ஜெயராசா சுகுணாவதி ஆகியோர் கௌரவிக்கப்படவுமுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)




# இறுதி அறிக்கை கிடைக்கும் வரைக்கும் குடிநீர்விநியோகம் நிறுத்தப்படமாட்டாது

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் உறுதி

(யாழ்ப்பாணம்)

குடி தண்ணீர் தொடர்பான ஆராய்வுகள் முற்று முழுதாக நிறைவடைந்து, பாதிக்கப்பட்ட பிரதேசமக்கள் அனைவருக்கும், தூய குடிநீர், அந்தந்தப் பிரதேசங்களிலேயே கிடைப்பது உறுதிப்படுத்தப்பட்டு, அப்பிரதேசத் தண்ணீரைப்பாவிக்க முடியுமென உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் வரை, தற்போது பிரதேசசபையும், வடமாகாண சபையும் இணைந்து வழங்கிவரும் குடிநீர் விநியோகம் எவ்விதத்திலும் இடை நிறுத்தப்படமாட்டாது என வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை குடிநீர்ப்பிரச்சினை தொடர்பாக தம்மைச்சந்திக்க வந்த பொதுமக்களிடம் கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

பாதிக்கப்பட்ட எமது பிரதேச மக்களுக்கான குடிநீர்சேவையை எமது வலி.வடக்கு, வலி.கிழக்கு, வலி.தெற்கு, வலி.மேற்கு, வலி. தென்மேற்கு ஆகிய பிரதேசசபைகள் வடக்கு மாகாணசபை மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை ஆகியவற்றின் உதவியுடன் தம்மால முடிந்த அளவில் முன்னெடுத்து வருகின்றனர். இப்பிரச்சினையின் உறுதியான, இறுதி அறிக்கை கிடைக்கும் வரைக்கும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படமாட்டாது. தொடர்ந்து குடிநீர் விநியோகம் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## அவசர கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை 25 ஆம் திகதி (புதன்) காலை 9 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (இ

## கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை அருள்மிகு விசாலாட்சி அம்பாள் சமேத காசிவிஸ்வநாதர் கோவில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபன திருக்குட நன்னீராட்டுப் பெருஞ்சாந்திப் பெருவிழா ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.40 மணி முதல் முற்பகல் 10.30 மணிவரை இடம்பெறவுள்ள அதேவேளை ஏப்ரல் 4 ஆம் திகதி சனிக்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (இ

## அதிபர்களுக்கான மீளாய்வுக்கூட்டம்

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக் கான மீளாய்வுக் கூட்டமானது நாளை 25 ஆம் திகதி புதன்கிழமை முற்ப கல் 10 மணிக்கு வலய முகாமைத் துவ மண்டபத்தில் இடம்பெறும். அனைத்து அதிபர்களையும் பங்கு பற்றுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5)

## புதிய நிர்வாகத்தெரிவு

(கரணவாய்)

உடுப்பிட்டி இமையாணன் மேற்கு நாவலடி நாவலர் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகளை தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு மாணவர் மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ





# நேர்மையான சிந்தனையுள்ள ஒருகளத்தை உருவாக்க தமிழர் ஒன்றிணைய வேண்டும்

## முன்னாள் எம்.பி.கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புதிய தலைமைத்துவத்தை உள்வாங்கி தூரநோக்குள்ள நவீனத்துவமான அரசியல் வியூகங்களை தேர்ந்தெடுத்து மக்களது மனங்களில் உண்மைத்தனமான விடயங்களை எடுத்துச்சொல்லி கடந்தகால வடுக்களையும் எமது இனம் விட்டுவந்த தவறுகளையும் தூக்கியெறிந்து புதிய பாதையை நோக்கிய தமிழ் மக்களது அரசியற் பயணத்திற்கு சுதந்திரமான பேச்சுரிமையுடன் நேர்மையான சிந்தனையுள்ள ஒரு களத்தை உருவாக்கிக்கொள்ள தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயக



கட்சியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார.

ஊர்காவற்றுறை தொகுதி கட்சியின் செயற்பாட்டாளர்கள் சந்திப்பு கடந்த 21 ஆம் திகதி ஊர்காவற்றுறை பிரதேசத்தில் நடைபெற்றது. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சமகால அரசியல் தொடர்பாக செயற்பாட்டாளர்களுக்கு விளக்கமளித்துள்ளார். இந்த சந்திப்பின்போது உரையாற்றுகையிலேயே ஒருங்கிணைப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொருவரது செயற்பாடுகளை வெளிப்படுத்துவதற்கும் மக்களை நேர்வழிகளில் திசைதிருப்புவதற்கும் வழிகாட்டியாக இருப்பதும் அந்த பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஊடகங்களின் பொறுப்பாகவே இருக்க வேண்டும்.

வடக்கிற்கான இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையானது இலங்கை-இந்திய நாடுகளின் உறவு நிலைகளை வளர்ப்பதற்கான செயற்பாடு மட்டுமாகவே பார்க்கப்பட வேண்டும். தமிழரது வாழ்வியலை புதிய அரசு ஒட்டுமொத்தமாக மாற்றியமைத்துவிடும் என்று குடாநாட்டில் மார்தட்டித்திரியும் கூட்டத்தினர் மக்களுக்கு தொடர்ந்தும் அவல வாழ்வைத் தான் நீட்டிக்கொண்டு செல்கின்றனர்.

தமிழர் உரிமைகளுக்கான போராட்டத்திற்கு அத்திபாரமிட்டவர்களால்தான் அதற்கான நிரந்தரத் தீர்வையும் பெற்றெடுத்து தரமுடியும். ஆனால் போராடிய அமைப்புகளை பணயம் வைத்து உரிமைப் போராட்டத்திற்கு முட்டுக்கட்டை போட்டவர்களும், பங்களிப்புகளை செய்யாதவர்களும்தான் தற்போது தமிழர் உரிமைபற்றி பிதற்றித்திரிகின்றனர்.

இவர்கள் தமது அரசியல் வாழ்வு அஸ்தமித்துவிடும் என்ற அச்சத்தின் காரணமாகத்தான் இத்தனை நாள்வரை கிடைக்கவந்த தீர்வுகளை எல்லாம் தடுத்து நிறுத்தியுள்ளனர் என்ற உண்மையை தமிழ் மக்கள் தற்போது தெரிந்து கொண்டுள்ளனர்.

கிடைக்கப்பெறுவதை பெற்றுக் கொண்டு தேவையான மிகுதியையும் படிப்படியாக இணக்கமான முறையில் பெற்றுக்கொள்வதுதான் எமது செயலாளர் நாயகத்தின் நிலைப்பாடு. அதற்காகத்தான் இதுவரை மத்திய அரசுடன் எமக்கு மக்கள் தந்த ஆணையைக் கொண்டு இணக்கமான உறவின்மூலம் பல்வேறுபட்ட சேவைகளைசெய்து வந்துள்ளோம்.

மக்களுக்கு எத்தகைய உரிமைகளை இன்றைய அரசியல் நகர்வுகளில் பெற்றுக்கொள்ள முடியுமோ அந்த வியூகங்களை நாம் கைவரப்பெற்று அதனை அடைந்துவிடுவதே எமது இனத்தின் நெடுநாள் தீரா பிரச்சினைகளுக்கு ஓரளவேனும் தீர்வுகாண முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணித் திருடர்களை சிறையில் அடைப்போம்

## ரஞ்சன் ராமநாயக்க எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையின் கடந்த கூட்டணி அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளுடன் தொடர்புடைய நபர்களுக்கு தண்டனை வழங்கும் வரை தேர்தல் அவசியமில்லை என கால்நடை பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.**



சிங்கள தொலைக்காட்சி நிகழ் வொன்றில் நேற்று கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தின் போதைப் பொருள் வியாபாரிகள், ஊழல் மோசடிக்காரர்கள் தற்போதைய அரசாங்கத்திலும் செயற்படுகின்றார்கள் என சிலர் கூறுவது உண்மையா என்று ரஞ்சனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்தவர், நான் நினைக்கிறேன் அது ஒரு போலியான குற்றச்சாட்டு, அது உண்மை என்றால் அரசியல் அநாதைகளாக்கப்பட்டவர்கள் தங்கள் ஆவணங்களை மறைத்துக் கொள்ளும் நோக்கில் அவரையே மீண்டும் அரசியலுக்கு கொண்டுவர முயற்சிக்கமாட்டார்கள்.

இந்த அரசாங்கத்திலும் திருடர்களுக்கும் மோசடிக்காரர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படுகிறதென்றால் நுகேகொடை, கண்டி கூட்டங்களை நடத்த தேவையில்லையே, அவர்களுக்கு தெரியும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊழல் மோசடிக்காரர்களுக்கு ஆதரவு, பாதுகாப்பு வழங்கமாட்டார் எனவும், அதனால் தான் தங்களை பாதுகாக்கும் ஒருவரை மீண்டும் கொண்டு வருவதற்கு மேடைகள், பேரணிகள், பிரசாரங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என கால்நடை பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## தினேஷ் குணவர்த்தனவை எதிர்க்கட்சித்தலைவராக நியமிக்க வேண்டுமாம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்துள்ள நிலையில், நிமால் சிறிபால டி சில்வா தொடர்ந்தும் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பது தார்மீக ரீதியாக பொருத்தமற்றது என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதனால், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனவுக்கு வழங்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வலியுறுத்தி நாளை மறுதினம் 26 ஆம் திகதி இரத்தினபுரியில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டம் தொடர்பாக தெளிவுபடுத்துவதற்காக கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, தினேஷ் குணவர்த்தன, தூய்மையான ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் உதய கம்மன்பில ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-5)

## கதிரைகள் கையளிப்பு

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி கேட்போர் கூடத்திற்கு கனடாவில் வாழும் கல்லூரியின் பழைய மாணவர்களினால் அவர்களின் பெற்றோரின் நினைவாக பிளாஸ்ரிக் கதிரைகள் கையளிக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான இக்கதிரைகளை கல்லூரி கேட்போர் கூடத் திற்கு வழங்குவதன் மூலம் கல்லூரி கேட்போர் கூடத்தில் இதுவரை இருந்து வந்த கதிரை பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை சமூகம் தெரிவிக்கின்றது. (இ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றி இலங்கை அதிபர் சேவை தரம் - 1 இல் பதவி உயர்வு பெற்ற எமது அதிபர் சங்க அங்கத்தவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.**



திரு. சி.பாலகிருஷ்ணன்
கிளி/பளை மத்திய கல்லூரி



திரு. ஆ.உதயணன்
கிளி/பரந்தன் இந்து ம.வி.



திரு. நா.கணேஸ்வரநாதன்
கிளி/அன்னைசாரதா தேவி வித்தி.



திரு. ச.புண்ணியமூர்த்தி
கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா.



திரு.சு.நடராசா
கிளி/அழகாபுரி வித்தி.



திரு. ஐ.குகானந்தராசா
கிளி/கனகபுரம். ம.வி.



திரு. சே.கலாதேவன்
கிளி/கல்மடு நகர் அ.த.க.பா.



திரு. நா. நடேசமூர்த்தி
கிளி/ ஜெயபுரம் ம.வி.

**வாழ்த்துவோர்: கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம், கிளிநொச்சி.**

(சி-444)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 37<br>சூரிசெவ் 4 ல்உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: B/455 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 70<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: G/729 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 51<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/456 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 37 சவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: G/733 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 3 1/2<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: O/L லண்டன் NOT PR<br>தொ.இ: B/457 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 17 செவ் 12 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BED, NIE/ ஆசிரியர்<br>தொ.இ: G/735 |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 15<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/460 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'6"தகைமை/தொழில்: BSC, MBA, PMA/ தனியார் தொழில்<br>தொ.இ: G/739 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
... காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்தவரெல்லாம் தேசிய கொடியையும் தேசிய கீதத்தினையும் மாற்ற முடியாதாம்!

## தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்



(கொழும்பு)

நினைத்தவர் எல்லாம் தேசிய கொடியையும் தேசிய கீதத்தையும் மாற்றியமைக்க முடியாது என முன்னாள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பின் பிரகாரம் இவ்வாறு மாற்றங்களை செய்ய முடியாது.

தேசிய கீதத்தை அல்லது தேசிய கொடியை மாற்றி அமைக்க முயற்சிப்பது அரசியல் அமைப்பிற்கு முரணானது.

இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என தினேஷ் குணவர்த்தன கொழும்பு ஊடகமொன்றுக்கு மேலும் தெரிவித்துள்ளார்.

தேசிய கீதம் தமிழ் மொழியில் பாட முடியும் என அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். இந்த கருத்துக்கு தெற்கின் அரசியல்வாதிகள் பலரும் ஊடகங்களும்வெவ் வேறு வழிகளில் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பேசும் படம்-62

இடம்: ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்



பாதசாரிகள் கடவையில் மனுசனும் மாடும் படும் பாடு!

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
தபால் முகவரி: ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
வி.ஜெயப்பிரகஸ்(MRTC)
கல்மடு, வவுனியா

# கடற்படை, விமானப்படை தளபதிகளுக்கும் கௌரவம்

(கொழும்பு)

போரை முடிவுக்குக் கொணடுவர பங்களிப்புச் செய்த கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகளையும் கௌரவப்படுத்துவோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

போர் இடம்பெற்ற காலத்தில் கடமையாற்றிய கடற்படை மற்றும் விமானப் படை தளபதிகளுக்கும் பதவி உயர்வு வழங்கப்படும்.

சரத் பொன்சேகா அப்போதைய அரசாங்கத்தினால் நெருக்குதல்களுக்கு இலக்கானவர். தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிர் பிழைத்தவர்.

இவ்வாறான ஒருவருக்கு பதவிகளையும் வீரப்பிரசாதங்களையும் வழங்குவதனை மக்கள் எதிர்க்கவில்லை.

போரை முடிவுக்குக்கொண்டு வர பங்களிப்புச் செய்த கடற்படை மற்றும் விமானப் படை தளபதிகளை அரசாங்கம் மறந்து விடாது.

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னா கொட, முன்னாள் விமானப்படைத் தளபதி ரொஷான் குணதிலக்க மற்றும் உயர் படையதிகாரிகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தும் என கபீர் ஹாசீம் சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-5)

# வடக்கு மாகாணத்தின் கல்விநிலை கவலைக்கிடம்

## முதலமைச்சரை தலையிடக் கோருகிறது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

**வடக்கு மாகாணத்தில் பல பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள அதிபர் வெற்றிடம் இன்னும் நிரப்பப்படவில்லை. வெற்றிடம் ஏற்பட்டு கல்வி வலயத்திற்கு பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை. மாகாணக் கல்விப் பணிப்பாளர் நியமனம் இதுவரை நடைபெறவில்லை. இதுவே இன் றைய வடக்கு மாகாணத்தின் கல்வி நிலை என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.**

ஒரு துறைசார் வெற்றிடத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே விண்ணப்பம் கோரவேண்டும். அத்துறையில் வெற்றிடமோ, தொடரின்மையோ ஏற்படாத வகையில் தொடர் சேவை பேணப்பட வேண்டும். அதிலும் மாணவர்களை மையப்படுத்தியுள்ள கல்வித்துறைக்கு அது மிகவும் அவசியமானதாகும்.

ஆனால் வடக்கு மாகாணத்தின் கல்விப் புலத்தில் இதுவரை அந்த நடைமுறைகள் எதுவும் பின்பற்றப் படவில்லை.

அதிபரும், ஆசிரியரும் இல்லாமல் வவுனியா வடக்கு கரப்புக்குத்தி பாடசாலை சிலகாலம் அல்லற்பட்டு தற்போது புதிய அதிபர் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப் பட்டுள்ளார்.

இதேபோன்று வட மாகாணத்தில் உள்ள பல பாடசாலைகள் அதிபர்களின் ஓய்வு அல்லது இடமாற்றத்தை அடுத்து அதிபர் இல்லாமல் இயங்குகின்றன. அந்த வெற்றிடங்களுக்கு கடமை நிறைவேற்றும் அதிபர்களை நியமியுங்கள் என்று நாம் பல முறை விடுத்த வேண்டுகோள்களும் நிராகரிக்கப் பட்டுள்ளன. கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு முறையான கடிதங்களை வழங்கி அவர்களிடம் பாடசாலைகளைக் கையளியுங்கள் என நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

அவர்களின் செயற்பாட்டுத்திறன்களையும் ஆதாரமாக முன்வைத்துள்ளோம். அவை எதுவும் நடைபெறவில்லை.

[illegible] ளர் ஓய்வு பெற்றுள்ளார். அந்த இடத்திற்கு இன்னும் பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை.

இதைவிட வடக்கு மாகாணத்திற்குப் பொறுப்பாக இருந்த பதில் மாகாணப் பணிப்பாளரும் தற்போது ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இந்த இடமும் வெற்றிடமாக உள்ளது.

தற்போது மாகாண பதில் பணிப்பாளர் யார் என்பது வலயங்களில் உள்ள கல்விப் பணிப்பாளர்களுக்குக்கூடத் தெரியாமல் உள்ளது.

வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னர் இத்தகைய நிலைபூதாகரமாக உருவெடுத்து வருவதனை பல கல்வியாளர்கள் சங்கத்திடம் முறையிட்டுள்ளனர். அவற்றை எழுத்து மூலமாகவும் சமர்ப்பித்துள்ளனர்.

ஏற்கனவே அதிபர்களின் இடமாற்றம் நடைபெறுவதாக உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்டு பின்னர் இரத்து செய்யப்பட்டது.

அதிபர்களுக்கான இடமாற்றக் கொள்கைகள் வகுப்பதற்கான கொள்கைகள் திட்டமிடப்பட்டு அவை கைவிடப்பட்டன. ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கொள்கைகள் வகுப்பதாகத் தீர்மானம் மட்டும் எடுக்கப்பட்டுள்ளது.

அதிபர், ஆசிரியர்களின் பதவியுயர்வுகளில் குறைபாடு, நிலுவைகள் வழங்குவதில் பாரபட்சம் மற்றும் குறைபாடு, இடமாற்றங்களில் முறையற்ற தன்மை, பதவியுயர்வு வழங்குவதில் பாரபட்சம், வளங்களைப் பகிர்வதில் முறைகேடு, அதிபர்கள், ஆசிரியர்களின் கோவைகளைப் பேணுவதில் தில்லுமுல்லு என எல்லாமே தலைகீழாக உள்ளது. இவை எல்லாவற்றிற்கும் சங்கம் ஆதாரங்களை வைத்துள்ளது.

எனவே வடக்கு மாகாண முதலமைச்சர் தலையிட்டு உடனடியாக நிவர்த்தி செய்யாவிட்டால், வேறு வழியின்றி வீதியில் இறங்குவதற்கு அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், மாணவர்களும் தயாராக உள்ளனர் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-5)

## போன்ஷுவா திரைப்படவிழா

போன்ஷுவா திரைப் படவிழா நாளை மறுதினம் 26 ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் தரங்கீ சினிமா மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

26ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் சுவிட்சர்லாந்து திரைப்படமான Sam காண்பிக்கப்படவுள்ளது.

27ஆம் திகதி 3 மணிக்கு வியட்நாம் திரைப்படமான Don't Burn திரைப்படமும் 6 மணிக்கு பெல்ஜியம் திரைப்படமான Paper Douls ஆகியன காண்பிக்கப்படவுள்ளன.

28ஆம் திகதி மாலை 3 மணிக்கு பிரெஞ்சுத் திரைப்படமான Gare du Nord மற்றும் மாலை 6 மணிக்கு பெல்ஜியம் திரைப்படமான Gabrille ஆகியவை காண்பிக்கப்படவுள்ளன. 29ஆம்திகதிமாலை 3 மணிக்கு பிரெஞ்சு திரைப்படமான Balle and Seba stian மற்றும் மாலை 6 மணிக்கு The Pirogue ஆகியன காண்பிக்கப்படவுள்ளன.

இலங்கை திரைப்பட கூட்டுத்தாபனமும் கனேடிய உயர் ஸ் தானிகராலயம் - பிரான்ஸ்- சுவிட்சர்லாந்து மற்றும் வியட்நாம் தூதுவராலயங்கள் ஆகியன இணைந்து இத்திரைப்படவிழாவை ஏற்பாடு செய்துள்ளன.

இத்திரைப்பட விழாவில் இலங்கை திரைப்பட இயக்குநர்கள் மற்றும் இலங்கைத் திரைப்படங்கள் என்பன அறிமுகப்படுத்தப்படவுள் ளதுடன் இலவசமாக காண்பிக்கப்படவுள்ளன. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை தவறுகளுக்கு தீர்வு வேண்டியே நாம் ஆட்சியை மாற்றியமைத்திருக்கின்றோம்

## வினோ எம்.பி.தெரிவிப்பு

(குருமன்காடு)

**வெறுமனே தேசிய இனப்பிரச்சினைக்காக மட்டும் ஆட்சியை மாற்றவில்லை. நாங்கள் கொண்டு வந்த மாற்றம் அடிப்படையில் இங்கிருந்த தவறுகளை சுட்டிக்காட்டி அதற்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் தெரிவித்தார்.**

வவுனியா நகரசபை மண்டபத்தில் சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போது கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,நாங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதனால் கிராமத்திற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு வழங்குங்கள் என கேட்கின்றனர். ஆனால் நாம் எந்த அடிப்படையில் அதனை வழங்குவது என திருப்பி கேட்கின்றோம். இவ்வாறான செயற்பாட்டைத்தான் முன்னைய அரசில் இருந்த சில அமைச்சர்கள் செய்தார்கள்.

அதிலும் குறிப்பாக வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் செய்தார்கள். தங்களுக்கு தேவையானவர்களுக்கு அவர்கள் கல்வி தராதரம் பார்க்கவில்லை. தங்களுடைய அரசியல் வேலைத் திட்டங்களில் பங்கெடுத்தவர்கள் அல்லது அரசியல் வேலைத்திட்டத்தில் ஆதரவாக செயற்பட்டவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

வெறுமனே நாங்கள் எங்களுடைய தேசிய இனப்பிரச்சினைக்காக மட்டும் ஆட்சியை மாற்றவில்லை. நாங்கள் கொண்டு வந்த மாற்றம் அடிப்படையில் இங்கிருந்த தவறுகளை சுட்டிக்காட்டி அதற்கு தீர்வு கிடைக்கவேண்டும். முன்னைய அரசாங்கம் அல்லது அந்த அரசாங்கத்தில் இருந்த அமைச்சர்கள் செய்த தவறுகள் புதிய அரசாங்கத்தில் செய்யப்படக்கூடாது என்பதற் காகவே இந்த மாற்றத்தை வேண்டினோம்.

இங்கிருந்த சில அமைச்சர்கள் கடந்த காலங்களில் அரச அதிகாரிகளை மிரட்டினார்கள். தாம் நினைத்ததை சாதிக்க வேண்டும். நினைத்ததை செய்து முடிக்க வேண்டும் என அதிகாரிகளை மிரட்டினார்கள்.

இதன் காரணமாக அவர்களுக்கு எடுபிடியாக இருந்தால் தமது பதவிகளை தக்க வைத்துக் கொள்ளலாம் என சில அதிகாரிகள் செயற்பட்டார்கள். ஆனால் வடக்கு மாகாண சபையில் அவ்வாறு அல்ல. அவ்வாறு இருக்கவும் கூடாது. கடந்த காலத்தில் அமைச்சர்கள் போல் மரணச்சடங்கென்றால் பிணமாகவும் திருமண வீடென்றால் மணமகனாகவும் இருக்கவேண்டும் என எண்ணியதைப் போல் இனிவரும் காலங்கள் இருக்கக் கூடாது. அவ்வாறு இல்லாவிட்டால் இந்த ஆட்சியையும் மாற்ற ஒன்றுபடுவோம் என தெரிவித்தார். (அ-250)

# கணித,விஞ்ஞான வள நிலையம் கிளிநொச்சியில் திறந்து வைப்பு





(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி மாவட்ட மாணவர்களின் கணித, விஞ்ஞான அறிவுத் திறனை விருத்தி செய்யும் நோக்கில் கணித, விஞ்ஞான வள நிலையம் கடந்த சனிக்கிழமை திருநகர் கனகராசா வீதியில் உள்ள கல்வி பண்பாட்டு அபிவிருத்தி வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தில் செயன்முறை ரீதியாக தங்களின் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட முதலாவது வள நிலையமாக இது காணப்படுகின்றது.

அத்துடன் கிளிநொச்சி மாவட்ட கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தினால் கலைத்துறையின் மேம்பாடு கருதி கவின் கலைச்சோலை இசை, நடன, ஓவிய வகுப்புகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இங்கு கலைத்துறையில் ஆர்வம் கொண்ட அனைவரும் மேற்படி துறைகளில் இலவசமாக பயிற்சிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

நிகழ்வில் மூத்த கலைஞர்களான ஐயாத்துரை சிவபாதம், திருமதி பார்வதி சிவபாதம் தம்பதியினர் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்காக கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த இவ்விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன்,வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், லிட்டில் எய்ட் நிறுவனத்தின் ஸ்தாபகர் கொன்ஸன்ரைன், அருட்தந்தை யோசுவா மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள்,ஆசிரியர்கள்,கலைஞர்கள்,மக்கள் என பலர் கலந்துகொண்டனர். (அ-281)

## இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 33 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மன்னார் நீதவான் அலெக்ஸ்ராஜா ஆசிர்வாதம் கிறேசியன் உத்தரவிட்டார்.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து 5 படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 33 பேரை, கடற்படையினர் கைது செய்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை தலைமன்னார் கடற்படையிடம் ஒப்படைத்தனர்,

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின்பின், மன்னார் மாவட்ட கடற்றொழில திணைக்கள அதிகாரிகளினூடாக மன்னார் நீதவான் அலெக்ஸ்ராஜா ஆசிர்வாதம் கிறேசியன் முன்னிலையில் அன்றைய தினம ஆஜர்படுத்தியபோதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார். (அ)










முல்லைத்தீவு மாவட்டத் தின் புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி திறப்பு விழாவும் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற புல மைப்பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்த புதுக்குடியிருப்பு பிர தேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் அண்மையில் புதுக் குடியிருப்பில் அமைந்துள்ள புதுக் குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங் கத்தில் இடம்பெற்ற போது... (படங்கள்:-பனிக்கன்குள செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Mகத நாட்டை விருபசேனன் ஆண்ட போது போதிசத்வர் ஒரு யானையாகப் பிறந்தார்.

அந்த யானை தேவலோக யானை ஐராவதம் போல வெள்ளையாக இருந்தது.

அதனால் மகத மன்னன் தன் பட்டத்து யானையாக அதனை வைத்துக் கொண்டான்.


ஒருமுறை ஏதோ ஒரு விழா நடக்க மகத நாடே தேவலோகம் போல அலங்கரிக்கப்பட்டது.

தலைநகரில் பிரம்மாண்டமான ஊர் வலம் நடக்க ஏற்பாடாகியது.


அதற்காகப் பட்டத்து யானை நன்கு அலங்கரிக்கப்பட்டது.

வீரர்கள் யானையின முன்னும் பின்னுமாக நடக்க, மகத மன்னன் அதன் மீது கம்பீரமாக அமர்ந்து சென்றான்.

வழி நெடுக்க மக்கள் கூடி "ஆகா! அந்த யானை தான் எவ்வளவு அழகாக இருக்கிறது! என்ன நடை! என்ன கம்பீரப் பார்வை!!" என்று அந்தப் பட்டத்து யானையைப் புகழ்ந்தார்



# வெள்ளை யானையின் சக்தி



கள்.

இப்படி யானையை மக்கள் புகழ்வது மன்னனுக்குப் பிடிக்கவில்லை.

அவன் தன் மனதில் 'நான் அரசன். எனக்கு இவர்கள் மரியாதை அளிக்காமல் இந்த யானைக்கு அளித்து அதனைப் புகழ்கிறார்களே.

இந்த யானையை ஒழித்தால்தான் இவர்கள் என்னைப் புகழ்வார்கள்' என்று தீர்மானித்துக் கொண்டான்.

அவன் யானைப்பாகனை அழைத்து "இந்தப் பட்டத்து யானை நன்கு பழக்கப்பட்டதுதானா?" என்று கேட்டான்.

அவனும் "இதனைப் பழக்கி இதன் மீது அம்பாரியை வைத்தவன் நானே" என்றான்.

மன்னரோ "இந்த யானை கட்டுக்கு அடங்காமல் இருக்கும் போலிருக்கிறது.

இது நன்கு பழக்கப்பட்ட யானை என்பதில் எனக்குச் சந்தேகமே" என்றான்.

யானைப் பாகனும் "அப்படி எல்லாம் இல்லை" என்று கூறவே மன்னனும் "அப்படியானால் இதனைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

உன்னால் இதை அந்த உயரமான மலை மீது ஏறச் செய்ய முடியுமா?" என்று கேட்டான்.

யானைப் பாகனும் "ஓ! முடியும்" என்று கூறி யானையை அம்மலை மீது போகவும் செய்துவிட்டான்.

அரசனும் தன் சில ஆட்களோடு அந்த மலையின் உச்சிக்குப் போனான்.

ஓரிடத்தில் செங்குத்தான பாறையும் மேலே மிகச் சிறிய இடம் சமதளமாக்வும் இருந்தது.

மன்னன் யானையை அங்கே நிறுத்தச் சொல்லி யானைப் பாகனிடம் "எங்கே இதனை அந்த இடத்தில் மூன்று காலால் நிற்கச் செய் பார்க்கலாம்" என்றான்.

யானைப் பாகனும் யானையிடம் அவ்வாறு செய்யும்படி கூறவே அதுவும் அவ்வாறே செய்தது.

அரசனுக்கு யானையை எப்படியாவது கொல்ல வேண்டும் என்ற எண்ணம் இருந்ததால் யானைப் பாகனிடம் "சரி, அதனை இப்போது அதன் இரு பின்னங் கால்களால் நிற்கச்சொல்" என்றான்.

யானைப் பாகனும் யானையிடம் அரசனின் கட்டளையைக் கூறவே அதுவும் தன் பின்னங்கால்களால் மட்டும் நின்று காட்டியது.

அடுத்து மன்னன் யானையை முன் கால்கள் இரண்டால் மட்டும் நிற்க வைக்கச் சொல்லவே, யானைப் பாகனும் சற்றுத் திகைத்து அரசனின் கட்டளையைக் கூறினான்.............. (தொடரும்)




- 1882 - காசநோயை உருவாக்கும் நோய்க்கிருமியைத் தாம் கண்டுபிடித்திருப்பதாக ராபர்ட் கோக் அறிவித்தார்.
- 1923 - கிறீஸ் குடியரசாகியது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: போலந்தில் சகான் என்ற இடத்தில் ஜேர்மனிய சிறையில் இருந்து 76 போர்க் கைதிகள் தப்பித்தனர்.
- 1947 - மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியாவின் பிரித்தானிய ஆளுநரானார்.
- 1965 - டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- 1965 - நாசாவின் ரேஞ்சர் 9 விண்கலம், சந்திரனில் மோதும் முன்னர் சந்திரனின் புகைப்படங்களை வீடுகளில் உள்ள தொலைக்காட்சிகளில் பார்க்கக்கூடிய படங்களாக மாற்றி பூமிக்கு அனுப்பியது.
- 1972 - ஐக்கிய இராச்சியம் வட அயர்லாந்தில் தனது நேரடி ஆட்சியை ஏற்படுத்தியது.
- 1998 - இந்தியாவில் டண்டான் பகுதியில் இடம்பெற்ற புயலில் 250 பேர் கொல்லப்பட்டு 3000க்கு மேல் காயமடைந்தனர்.
- 1999 - கொசோவோ போர்: நேட்டோ படைகள் யூகொஸ்லாவியாவில் வான் தாக்குதலை நடத்தின.

**பிறப்புக்கள்**

- 1776 - முத்துசுவாமி தீட்சிதர், இசை மும்மூர்த்திகளில் ஒருவர். (இ. 1835)
- 1884 - பீட்டர் டெபாய், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ. 1966)
- 1903 - அடொல்ஃப் பியூட்டினண்ட், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ. 1995)
- **1922 - டி.எம்.சௌந்தரராஜன், பாடகர்**
- 1917 - ஜோன் கெண்ட்ரூ, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1997)
- 1984 - கிரிஸ் பாஷ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புக்கள்**

- 1905 - ஜூல்ஸ் வேர்ன், பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1828)
- 1988 - சீர்காழி எஸ். கோவிந்தராஜன், கர்நாடக, திரையிசை பாடகர் (பி. 1933)
- 2002 - சேசார் மில்ஸ்டைன், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1927)

**சிறப்பு நாள்**

- அனைத்துலக காச நோய் தினம்



**ரி.எம்.சௌந்தரராஜன்**

'ரி.எம்.எஸ்' என்று அழைக்கப்படும் ரி.எம். சௌந்தரராஜன் அவர்கள், தமிழ்நாட்டில் மதுரையில், மார்ச் 24 ஆம் திகதி, 1922 ஆம் ஆண்டில், மீனாட்சி ஐயங்கார் என்பவருக்கு இரண்டாவது மகனாக ஒரு சௌராட்டிரப் பிராமணக் குடும்பத்தில் பிறந்தார்.

அவரது மூத்த சகோதரர், வேத நூல்களைக் கற்று அறிஞராகத் திகழ்ந்தவர்.

தன்னுடைய ஏழு வயதில் இருந்தே, தனது குரல்வளத்தின் மீது அக்கறைக் காட்டத் தொடங்கிய அவர், 1946 இல் இருந்து 2007 ஆம் ஆண்டு வரை, தமிழ்த் திரையுலகில் ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக, தென்னிந்திய திரையுலகின் முன்னணி கதாநாயகர்களுக்குப் பின்னணிக் குரல் கொடுத்தவர்.

பின்னணித் துறையில், 'ரி.எம்.எஸ்' மற்றும் 'பி.சுசீலா' அவர்களது ஜோடி பெரிதும் பேசப்பட்டது. அவர்கள் இருவரும் இணைந்து பல்வேறு திரைப்பாடல்களைப் பாடியுள்ளனர். திரைப் பாடல்கள் மட்டுமின்றி, பல பக்திப் பாடல்களையும் பாடிய டாக்டர் ரி.எம். சௌந்தரராஜன் 1950களிலிருந்து 1980 வரை, தமிழ்த் திரையுலகின் பின்னணித் துறையில், முடிசூடாமன்னனாகத் திகழ்ந்தார்.

10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்ப் பட பாடல்களையும், 2500 பக்திப் பாடல்களையும் பாடி, பல்வேறு இசையமைப்பாளர்களுடன் இணைந்து பணிபுரிந்து, பல பாடல்களுக்கு இசையமைத்து, சில தமிழ்ப் படங்களில் நடித்த ரி.எம். சௌந்தரராஜன் அவர்கள் பெற்ற விருதுகளும், அங்கீகாரங்களும் எண்ணிலடங்காதவை.

இவர் இதயக் கோளாறு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்து பின்னர் தனது 91 ஆவது வயதில 2013 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

...ஆன்மீகவாதியா இருந்தால் அசைவமாக இருக்கக் கூடாதுன்னு யார் சொன்னாங்க? ஒருத்தன் என்ன சாப்பிடறான்கிறது முக்கியம் இல்லை. அவன் எப்படி வாழறான்கிறது தான் முக்கியம். இவனால அடுத்தவங்களுக்கு உபகாரமா இருக்க முடியுமா? இல்லை உபத்திரவமாக இருக்கானா அப்படிங்கிறதை வைச்சுத்தான் அவன் ஆன்மீகவாதியா, இல்லையான்னு முடிவு பண்ணனும்.


அன்பும் மனிதநேயமும் மட்டுமே ஒருத்தனை ஆன்மீகவாதியா நமக்கு அடையாளம் காட்டுது.

### என் கடவுளுக்கு மதம் கிடையாது

"எம்மதமும் சம்மதம் என்று கூறும் நீங்கள், இந்து மதம் சொலகிறபடி விபூதி பூசிக்கொள்ளலாமா?" என்று சில பேர் கேட்கிறாங்க. சின்னவயதிலிருந்தே எனக்கு ஏற்பட்ட பழக்கம்தான் விபூதி பூசறது. அதனால இன்னிக்கும் நான் விபூதி பூசிக்கிறேன். விபூதி பூசிக்கிறதை வைச்சுக்கிட்டு, நான் இந்து மதத்தைச் சேர்ந்தவன்னு குற்றம் சொல்றதிலே எந்த அர்த்தமும் இல்லை. ஏன்னா என்னோட கடவுளுக்கு மதம் கிடையாது.

உலக அமைதிக்காகவும், மனித சமாதானத்துக்காகவும் நான் மத சமரசத்தை வரவேற்கிறேன்.







ராகவேந்திரராக ரஜினி

ஆனா தனிப்பட்ட ஒரு மதத்தின் மேலே "வெறி" கொள்றதை - அந்த மதத்துக்காகச் சார்ந்து பேசறதை நான் என்னிக்குமே விரும்பினதில்லை.

### துன்பத்துக்கு காரணம்

இன்னிக்கு இருக்கிற துன்பங்களுக்கெல்லாம் என்ன காரணம்னு நாம நினைச்சுப் பார்க்கிறோமா? ஆசை... யெஸ் அது தான் எல்லா வகையான கஷ்டங்களுக்கும் காரணம்.

போதுங்கிற மனமே பொன் செய்யும் மருந்து. இருக்கிறதிலே திருப்தி கண்டாலே போதும். அதுதான் உண்மையான இன்பம். இருக்கிறதை விட்டுப்புட்டு பறக்கிறதைப் பிடிக்க நினைக்கிறப்போதான் ஏமாற்றமும் விரக்தியும் மிஞ்சுது.

எதிர்காலத்தைப் பற்றிய கவலையிலேயே நிகழ்காலத்தை இழந்துக்கிட்டிருக்கோம். நாளைக்கு என்ன நடக்குமோ? எப்படி சமாளிககப் போறோமோ... இப்படி பயந்தே வாழ்க்கையில எந்த நாளையுமே முழுசா அனுபவிக்காம விட்டுடறோம்.

### பகல் கனவு

கனவிலே இரண்டு வகை. ராத்திரியிலே காண்றது ராத்திரி கனா. பகல்லே காண்றது பகல் கனவு.

இப்ப நாம வாழ்ந்துக்கிட்டிருக்கிற வாழ்க்கைப் பகல்கனவு. பணம், பொருள், புகழ், பதவி... இதெல்லாம் அந்தப் பகல் கனவோட அஸ்திவாரங்கள். ஆனா சாஸ்வதம் இல்லாத... சட்டுனு கலைஞ்சுப் போயிடக்கூடிய அஸ்திவாரங்கள்.

யெஸ். இன்னும் 25 வருடம் கழிச்சு, உங்க பழைய வாழ்க்கையை நினைச்சுப் பார்த்தா 25 வருடங்கறது 25 நிமிஷமா நமக்குத் தெரியும்.

நான் நடிக்க வந்தப்போ சிவாஜி சார் நடிச்சுக்கிட்டிருந்தாரு. ஜெய்சங்கர் நடிச்சுக்கிட்டிருந்தாரு. அதுக்கப்புறம் இரண்டு தலைமுறை நடிக்க வந்திருக்கு. ஆனா எனக்கு நேத்துதான் "அபூர்வ ராக"ங்களில் நடிச்சேன்கிற மாதிரி பீலிங்.

எல்லாமே கனவு... பகல் கனவு. வேகமா ஓடி வேகமா மறைஞ்சுடும். அதுக்காக எதுவுமே இங்கே சாஸ்வதம் கிடையாதுன்னு சொல்லிக்கிட்டு யாருமே சும்மா உட்கார்ந்திடக்கூடாது.

அவங்க அவங்க தங்கள் தங்கள் கடமைகளை ஒழுங்கா செய்யணும். இதை நான் சொல்லலை. பகவானே கீதையிலே சொல்லியிருக்காரு.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து - 98

...நீங்க வேணும்னா பாருங்க... எல்லா மனுசங்களையும் உத்துப் பாத்தா ஒரு மிருகமூஞ்சி தெரியும்; எல்லா மிருகங்களையும் உத்துப் பாத்தா ஒரு மனுசமூஞ்சு தெரியும்.

கருவாச்சி குட்டிய நேராப் பாத்தா ஆடாத் தெரியுது; அட்டத்துல பாத்தா ஒரு ஆளாத் தெரியுது. உத்துப்பாத்தா உள்... ளுக்கத் தெரியுது ஒரு சொந்தக்காரமூஞ்சி.

புடிடா பிள்ளையன்னு அழகுசிங்கத்த அவன் கையில குடுத்துட்டு ஆட்டுக்குட்டியத் தூக்கி மடியில போட்டு மாரோட அழுத்திக்கிட்டா. அவ அழுத்துன அழுத்தத்துல பிதுக்குன்னுப் பிதுங்கிப் பீச்சியடிச்சு முந்தானைய நனச்சுட்டுப் போகுது ரெண்டுமூணு சொட்டுத் தாய்ப்பாலு.

கெடாக்குட்டிக்கு முத்தங்குடுத்து மோந்துபாத்துக்கிட்டே சொல்றா...

இது காட்ல வந்த பொருள் இல்லடா கொண்ணவாயா. கடவுளாப் பாத்துக் குடுத்தது. ஒத்தையில பிள்ளைப் பெத்தன்னக்கே தாயும் பிள்ளையும் தனித்தனியா ஆகிட்டா ஒனக்குக் கெடா வெட்டுறேன் தாயின்னு காளியாத்தாவுக்கு நேந்துக்கிட்டேன். என்னைக்கி வெட்டுறது? பொழைச்சுக் கிடந்தன்னைக்கு வெட்டிகிரலாம்ன்னு புத்தி சொல்லிச்சு. நீ என்னைக்கிப் பொழைக்கிறது.... என்னைக்கி எனக்கு வெட்டுறது... இந்தா வளத்து



வெட்டிக்கன்னு கெடாக்குட்டியக் குடுத்துருக்கா காளியாத்தா. தெய்வம் தந்த பொருள் தெய்வத்துக்கே சேக்கணுமடா.

ஆட்டுக்கு[illegible] பே.... பே.... பேருவைக்கணும் சின்னத்தா.

இது செம்பிலி ஆடு இல்லடா செம்புலிடா. புலித்தேவன்னு வைடா. பூ.... பூ.... பூ..... பூலித்தேவா ஓ....

ஓ.....ஓ... ஒனக்குப் புல்லி வைக்கிறேன் வா வச்சு முடிச்சவுடனயே ஒரு திக்கு வாய் மூலமாப் பேரு தொலங்க ஆரம்பிச்சுருச்சு.

பிள்ளைப் பெத்த வீடு; தானியம் அடிச்ச வீடு, வயசுப் பொண்ணு கொலுசுமாட்டி அங்கிட்டும் இங்கிட்டும் அலையற வீடு; கல்யாணம் நிச்சயமான வீடு; மாடு கண்டு போட்ட வீடு. இதெல்லாம் எப்பவும் கலகலப்பாயிருக்கும் பாத்துக்குங்க. இதுல கெடையில கெடாக்குட்டி கெடச்ச வீட்டையும் சேத்துக்கிரலாம் இப்ப.

அழுத பிள்ளைக்குப் பால் குடுத்தமாங்கிறதும் ஆட்டுக்குட்டிக்குத் தண்ணி வச்சமாங்கிறதும் ஒண்ணாகிப்போச்சு கருவாச்சிக்கு.

அருகம்புல்லுல எளம்புல்லாப் புடுங்கிக் கூடையில போட்டு வச்சா குட்டி கடிக்க.

புளிச்ச தண்ணியில உப்புப் போட்டுக் கலக்கி சருவச் சட்டியில தூக்கி வச்சா குட்டி குடிக்க.

அகத்திக் கீரையில எளந்தழையா வாங்கி, கடிக்க ஏதுவான எடத்துல கட்டிவிட்டா.

குட்டியக் கயிறு போட்டுக் கட்டி வச்சத இழுக்கிற இழுப்புல கழுத்து புண்ணாகிப்போகுமா இல்லையா... அதுக்காகக்கொண்ணவாயன விட்டுக் கொடத்துல குச்சி கட்டச் சொல்லி ஒரு படலும் போட்டுவிட்டு இந்த எல்லைக்குள்ள நீ தவ்விக்க; வெளையாடிக்க; செல்லச் சேட்டை பண்ணிக்கன்னு விட்டுட்டா குட்டிய.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வணிகர் கழகத்தின் தலைவரை மன்னிப்பு கோரக்கோரி போராட்டம்!

**(யாழ்ப்பாணம்) யாழ்.வணிகர் கழகத்தலைவரை மன்னிப்புக் கோருமாறு கோரி யாழ்.மாநகர சபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் நேற்றையதினம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.**




யாழ்.நவீன சந்தை கட்டடத்தில் உள்ள புடைவைக் கடையொன்றின் பணியாளர் ஒருவர் யாழ்.மாநகர சபை சுத்திகரிப்பு தொழிலாளி ஒருவரை நேற்று முன்தினம் மாலை தாக்கியதையடுத்தே இப்பிரச்சினை எழுந்துள்ளது.

இதனால் நேற்றைய தினம் நவீன சந்தை கட்டட கடைத்தொகுதிகள் பூட்டிய நிலையிலேயே காணப்பட்டன.

மாநகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் குறித்த கடைத் தொகுதிகளிற்குள் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட அங்கு நிலைமை மேலும் பதற்றமானது.

இதனால் குறித்த இடத்திற்கு கலகமடக்கும் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வர பொலிஸார் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

எனினும் யாழ்.வணிகர் சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் எமது தொழிலாளியினை அவமானப்படுத்தியதாகவும் ஜெயசேகரன் தங்களிடம் மன்னிப்புக் கேட்டால்தான் தாம் போராட்டத்தினை கைவிடுவோம் எனக் கூறி போராட்டத்தை தொடர்ந்தனர்.

இதன்போது யாழ்.வணிகர் கழக தலைவரின் புகைப்படம் பொறித்த துண்டுப்பிரசுரங்களும் ஒட்டப்பட்டு அதில் ஜெயசேகரனே மன்னிப்புக்கேள் என எழுதப்பட்டுமுள்ளன. (இ-4)

அரசாங்கமும் புதிய அமைச்சர்களும்

## வெட்கம் கெட்ட செயலை மேற்கொண்டுள்ளனராம்

அரசாங்கமும் புதிய அமைச்சர்களும் வெட்கம் கெட்ட செயலை மேற்கொண்டுள்ளதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நூறு நாள் வேலைத்திட்டத்தில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதாக அறிவித்த அரசாங்கம் அமைச்சரவையை விசாலப்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த இரண்டு தரப்பினரதும் நடவடிக்கைகள் வெட்கம் கெட்ட செயலாகவே கருதப்பட வேண்டும்.

நேற்று முன்தினம் அமைச்சுப் பதவியை பெற்றுக் கொண்டவர்கள் மற்றும் ஏற்கனவே அமைச்சுப் பதவிகளை வகிப்பவர்களின் பதவிகள் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி வரையிலேயே நீடிக்கும் என்பதனை மறந்து விடக்கூடாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிலருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி தேசிய அரசாங்கமொன்றின் மூலம் ஆட்சி அதிகாரத்தை நீடிக்க முயற்சித்தால், கடந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப மக்களை அணி திரட்டியது போன்று இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப மக்களை அணி திரட்ட நேரிடும் என ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# உலக காசநோய் தினம்

சிந்தி நீ சிந்தி நீ
காசம் இனி இல்லை என்று சிந்தி

இன்றே சிந்தி நீ
சிந்தி நீ சிந்தி நீ
இரு கிழமைகளுக்கு மேல் இருமல்
இருமலுடன் இரத்தம்
மாலையில் காய்ச்சல்
உணவில் பிரியமின்மை
உடல் மெலிதல்
இவையே காசத்தின் அறிகுறிகள்
இன்றே சிந்தி நீ சிந்தி-நீ

சிந்தி நீ சிந்தி நீ
சளிப்பரிசோதனை செய்திட
மருந்துகளை உள்ளெடுத்திட
பூரண சிகிச்சைக்கு
இடைவிடாத சிகிச்சைக்கு
இன்றே சிந்தி நீ சிந்தி நீ

சிந்தி நீ சிந்தி நீ
6 மாத சிகிச்சைக்கு சிந்தி நீ
காசம் பரவாதிருக்க சிந்தி நீ
இருமும் போது பரவாதிருக்க சிந்தி நீ
காச விழிப்புணர்வில் சிந்தி நீ
இன்றே சிந்தி நீ

சிந்தி நீ சிந்தி நீ
காச நோயாளிக்கு சேவையை அர்ப்பணிக்க
காசநோயாளிகளைக் கண்டறிய
காசநோயினைக் குணப்படுத்த
சமூக நாணத்தை அகற்ற
இவ்வுலகில் காசம் இல்லாது ஒழியச் சிந்தி நீ



Health Care

## மருத்துவ உலகம்

உங்கள் நலம் உங்கள் கைகளில்

மார்ச் 24 ஆம் திகதி உலக காசநோய் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டுக்கான தொனிப்பொருள் காசநோயாளிகளை கண்டறிந்து சிகிச்சை அளித்து குணப்படுத்துவது பற்றியதானதாகும். உலகில் சுமார் 8.6 மில்லியன் மக்கள் காசநோயினால் 2012 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டனர். இதில் 1.3 மில்லியன் பேர் இறந்தனர். நோயாளிகளை ஆரம்பத்தில் இனம் கண்டு சிகிச்சை அளித்தால் பூரண குணமடைவர். காசநோய்க்கு சிகிச்சை அளிக்க புதிய இரு மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டு நோயாளர்களுக்கான சிகிச்சையில் புகுத்தப்பட்டுள்ளது. இதனால் காசநோய் சிகிச்சையில் பாரியமாற்றம் எதிர்வரும் காலங்களில் ஏற்படும். இப்புதிய மருந்துகளை உபயோகிப்பதால் காசநோய்க்கான சிகிச்சை 6 மாதங்களில் இருந்து 4 மாதங்களாகக் குறையும்.




அடுத்து ஒருவர் சுவாசிக்கும் போது வெளிவரும் காற்றிலிருந்து காசநோய்க்கிருமிகளை கண்டறியும் தொழில்நுட்பமும் வெற்றியடைந்துள்ளது. இதனால் காசநோயாளிகளை எளிதாக இனங்கண்டறியலாம்.

மருத்துவ சேவையின் விரிவு, முன்னைய காலங்களைப் போல் அல்லாது எதிர்வரும் காலங்களில் சாதாரண வைத்தியசாலைகள், தனியார் வைத்தியசாலைகளிலும் காசநோய்க்கான சிகிச்சையினை மேற்கொள்ளக்கூடிய சூழல் உருவாகும்.

உலக சுகாதார நிறுவனம் காசத்தை இல்லாதொழிக்கும் உத்தி என புதிய செயல் நெறியினை உருவாக்கியுள்ளது.

இதன்மூலம் 2015 இல் உள்ள காசநோயளிகளின் எண்ணிக்கையில் 2025 இன் 50 வீதம் குறைப்பினையும் 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட காச இறப்பில் 75 வீதம் குறைப்பினை 2025 இல் உருவாக்க எண்ணியுள்ளது.

இலங்கையில் ஆண்டுதோறும் 9000 பேர் காசநோய்க்கு சிகிச்சை பெறுகின்றனர். சுமார் 4000 பேர் காசநோயினை கண்டறியாது தவறவிடப்படுகின்றனர். யாழ்.குடாநாட்டிலும் சுமார் 250 பேர் காசநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர். சுமார் 100 பேர் வரை காசநோய் என இனங் காணப்படாதுள்ளனர்.

காசநோயாளர்களுக்கான பிரத்தியேக வைத்தியசாலை வடபகுதியில் மயிலிட்டியில் அமைந்திருந்தது. அதில் 110 நோயாளர்களுக்கு விடுதி வசதியுடன் சிகிச்சை அளிக்கக்கூடிய ஆளணி வசதி இருந்தது. இவை இலங்கை சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வசதி உலக காசநோய் தினத்தில் ஒன்று கூடும் சுகாதார அதிகாரிகள் இதில் கரிசனை எடுத்தல் வேண்டும்.

அடுத்து PAL அணுகுமுறை எனப்படும் சுவாச ஆரோக்கியத்திற்கான அணுமுறையில் மார்பு நோய் சிகிச்சை நிலையத்திற்கு வரும் நோயாளிகளை திருப்பி அனுப்புதல் தவறான அணுமுறையாகும்.

யாழ்.மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்திற்கு ஊடுகதிர் இயந்திரம், இந்தியாவிலிருந்து வரும் மீளக்குடியமர்பவர்களுக்காகவே 10m நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. எனவே அவ்வாறு மருத்துவப் பரிசோதனைக்கு வருபவர்களை திருப்பி அனுப்புதலும் தவறானதாகும்.

சுகாதார நிர்வாக அதிகாரிகளின் தவறான அணுகுமுறைகளால் வடபகுதியில் காசநோய்க் கட்டுப்பாட்டு பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. இதற்கு ஒரு எளிய உதாரணமே உலக காசநோய் தினத்தில் புற்று நோய்க்கான விழிப்பு நடைப்பயணத்தை மேற்கொள்ளல்.

**மருத்துவர் சி.யமுனாநந்தா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபுணர்குழுவின் அறிக்கையினை பார்த்து நாம் ஆச்சரியப்பட்டோம்

## விதை அமைப்பு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகமும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் ஏற்பட்டிருக்கும் நீர் மாசடைதலை அவதானித்ததும் அதன் பொருட்டு சிந்திக்கும் குழுக்களில் ஒன்றாகிய நாம், கடந்த வாரம் வெளியிடப்பட்ட வடமாகாண சபையின் விசேட நிபுணர் குழுவின் அறிக்கையை பார்த்து ஆச்சரியப்பட்டோம்.

அவர்களின் அறிக்கையில் விஞ்ஞான ரீதியிலான பல முடிபுகளை வெளியிட்டிருந்தாலும் ஒரு மிகச் சாதாரணமானதும் அவசியமானது மான கேள்விக்கு அவர்கள் விடையளிக்கத் தவறியிருந்தனர்.

அது இந்த நீர் பாதுகாப்பானதும் உணவு மற்றும் ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்தக் கூடியதுமான நீரா? என்பதுவேயாகும் மேலும்

1.அப்படியெனின் மக்களின் கிணறுகளில் மிதப்பது என்ன?

2.உளவியல் ரீதியாக மக்களுக்கு ஏற்படும் பயம் மற்றும் அருவருப்பை அகற்றுவது எப்படி?

3.ஏற்கனவே நீர் வழங்கலில் ஏற்படும் தாமதம் தொடர்பாக மக்களுக்கு அதிருப்தி நிலவும் போது அறைகளுக்குள் இருந்து அறிக்கையை வெளியிடுவதைவிடுத்து பொது வெளிக்கு வந்து மக்களுக்கு நம்பிக்கையை உறுதிப்படுத்தாதது ஏன்?

இன்னும் சில குறைபாடுகளை எமது சிந்தனைக் குழாம் இந்த அறிக்கையின் மீது கொண்டிருக்கிறது.

ஆனால் தூய நீருக்காக பாதிக்கப்பட்ட மக்கள் ஒன்றியம் வெளியிட்ட ஊடக அறிக்கையின் மூலம் அந்த கேள்விகளும் எழுப்பப்பட்டுள் ளன. அந்த அறிக்கையை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

ஆகவே மேற்குறிப்பிட்ட விடயங்களை தெளிவுபடுத்தாதவிடத்து யாழ்ப்பாணத்தில் உள்ள கலைஞர்கள் ,எழுத்தாளர்கள் பொது அமைப்புக்களின் ஒன்றிணைந்த ஆதரவினை மக்களின் போராட்டத்தின் போது தெரிவித்து வீதியில் இறங்குவோம் என்று அறிவித்துக் கொள்கின்றோம் என சமூக சிந்தனைக்கும் செயற்பாட்டிற்குமான கூட்டிணைவு அமைப்பான விதை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்தால் தேசிய அரசுக்கு ஆதரவு

(கொழும்பு)

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு துரித தீர்வுகள் கிடைக்கப் பெறும் என்ற நிலைமை ஏற்பட்டால் மாத்திரமே தேசிய அரசாங்கத்திற்கு தமது ஆதரவை வழாங்கவுள்ளதாக மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

முன்னணியின் ஸ்தாபகத்தலைவர் பெரியசாமி சந்திரசேகரனின் 5 ஆவது வருட நினைவு நிகழ்வாக ராகலை மாகுடுகலை தோட்டத்தில் மண்டபம் ஒன்று நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் உரையாற்றிய கல்வி இராஜாங்க அமைச்சர் வி.ராதாகிருஷ்ணன் புதிய தேசிய அரசாங்கத்தை தாம் வரவேற்பதாக தெரிவித்தார். (இ-5)




வாழ்வின் எழுச்சி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.நகர் மேற்கு சமுதாய அடிப்படை வங்கியின் ஜே-84 கிராம அலுவலர் பிரிவுக்குரிய பயனாளி ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 50 | 60 | 60-80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 80 | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 | 80 | 60 | 60 |
| தக்காளி | 50 | 80 | 40 | 50 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 60 | 40 | 50 |
| கோவா | 50 | 30 | 40 | 60 | 40 | 40 |
| கரட் | 200 | 120 | 90 | 120 | 100 | 140 |
| பூசணி | 60 | 60 | 50 | 60 | 50 | 50 |
| புடோல் | 40 | 30 | 40 | 50 | 30-40 | 40 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 60 | 50-70 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 80 | 60 | 80 | 50-80 | 50 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 100 | 100 | 70 | 80 | 70 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 | 80 | 30-50 | 50 |
| கருணைக் கிழங்கு | — | 50 | 60 | 70 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 80 | 40 | 80 |
| லீக்ஸ் | 200 | 120 | 150 | 200 | 100-110 | 150 |
| பீற்றூட் | 40 | 50 | 70 | 80 | 60 | 40 |
| கறிமிளகாய் | 200 | 120 | 100 | 120 | 120-140 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 140 | 100 | 160 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 30 | 60 | — | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 80 | 60 | 60 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 50 | 50 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 120 | 100 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 140 | 100 | 160 | 80 | 80 |
| முள்ளங்கி | 20 | 30 | 40 | 80 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 10 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 320


சாகி சாகித்தியா




மோகன் ராஜ்





பவானி சங்கர்





ரகு ரகுராம்




தனு தனுசன்




மாது மாதுசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறந்தாரா...? மறுத்தாரா...? மறுக்கப்பட்டாரா...?



...முக்கியத்துவம் மிக்க அரச தலைவரின் விஜயத்தின் போது மலையகத்தின் மீதான இந்தியாவின் வகிபாகம் தொடர்பில் எடுத்துரைப்பதற்கும் அதனூடாக அரசியல் காய்நகர்த்தல்களை மேற்கொள்வதற்கும் தவறியுள்ளதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

பிரித்தானியாவின் இளவரசர் சாள்ஸ் இலங்கை வந்திருந்த போது மலையகத்துக்கு அழைத்து செல்லப்பட்ட அவருக்கு மலையக மக்களின் உண்மையான வாழ்க்கை நிலை மறைக்கப்பட்டது. வியர்த்துக் கொட்டும் வெயிலிலும் உடல் முழுவதும் ஊறி நனையும் மழையிலும் மலையகத்தின் பெண் தொழிலாளிகள் பட்டுப்புடவை உடுத்தி நகை நட்டுக்களை மாட்டிக்கொண்டுதான் தொழில் செய்கின்றனர் என்றதொரு மாயத் தோற்றத்தை படம்பிடித்துக்காட்டியிருந்தனர்.

அப்படியாகிலும் அவர் மலையக மக்களை சந்தித்தாரே என்றதொரு நிம்மதியை அடைந்தாலும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் மலையகமே மறைக்கப்பட்டுவிட்டது என்பதுதான் கொடூரமான வேதனையாகவுள்ளது.

இதுதான் அவ்வாறு ஆகிவிட்டது என்றாலும் மலையகத்தலைமைகள் நரேந்திர மோடியுடன் ஏற்படுத்திக் கொண்ட சந்திப்பையேனும் அர்த்தப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். எல்லாமே பழைய குருடியின் கதையாகி போயுள்ளதை காண முடிகின்றது. மலையகம் தொடர்பிலும் மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் மூன்றாவது தரப்பிடம் எடுத்துக்கூறும் விடயத்திலாவது மலையகத் தலைமை தமது விதண்டாவாதக் கொள்கைகளை சற்று புறத்தே வைத்துவிட்டு செயற்படுவதற்கு தவறிவிடுகின்றன.

சமூகப் பிரச்சினை எனும் போது முஸ்லிம்கள் அணி திரண்டு ஒருமனதாய் குரல் கொடுத்து வெற்றி காண்பவர்களாய் திகழ்ந்து வருகின்றனர். அப்படியானால் சமூகம் என்ற ரீதியில் ஏன் சில விடயங்களில் மலையக தலைமைகளால் சில விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்ள முடியாதிருக்கின்றது என்பது புரியாதுள்ளது.

மோடியின் வருகைக்கு முன்பதாக இலங்கை வந்த சுஷ்மா சுவராஜை மலையக தலைமைகள் முறையாக அணுகியிருந்தால் மோடியின் விஜயம் மலையகத்துக்கு எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எடுத்துக்கூறியிருந்தால் நிச்சயமாய் அது பரிசீலிக்கப்பட்டிருக்குமே தவிர பாதுகாப்பு பிரச்சினை என்று சாக்குப் போக்கு கூறி மலையக மக்களை சந்திப்பதற்கான காரியம் தடைப்பட்டிருக்க வாய்ப்பிருந்திருக்காது.

மேலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸானது அமைச்சுப் பதவிகளை வகித்த காலத்தில் ஏனைய மலையக கட்சிகளை பொருட்டாகவே கொண்டது கிடையாது. முக்கிய தலைவர்களை சந்திக்கும் விடயத்திலும் சரி மலையக மக்களின் விவகாரம் தொடர்பான விடயங்களிலும் சரி அது தனித்தே முடிவெடுத்து செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேபோன்றதொரு நிலைமை இன்றும் காணப்பட்டு வருகின்றது. மோடி யை சந்தித்த முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தில் அமைச்சுப்பொறுப்புக்களில் உள்ளவர்களே பங்கேற்றிருந்தனர். இதில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் இணைந்திருந்தார்.

மலையகத் தலைமைகள் எல்லோருமே மலையக மக்கள் குறித்தே பேசப்போகின்றனர். அவர்களது பிரச்சினைகள், அரசியல் ரீதியிலான தாக்கங்கள், இழப்புக்கள் தேவைகள், குறை நிறைகள் குறித்தே பேசுவது வழக்கமாகும். இவ்வாறு தலை

சமூகம் தொடர்பில் பிறிதொரு நாட்டுத் தலைவருடன் பேசுவதற்கு முற்படுகையில் ஏன் மலையக பிரதிநிதிகள் ஒன்றிணைந்து செயற்படக்கூடாது என்பது கேள்வியாக உள்ளது.

அரசாங்கத்தோடு இல்லாத இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனியாகவும் அரசாங்கத்தோடு இருக்கின்ற அமைச்சர்கள் அடங்கிய தலைவர்கள் தனியாகவும் மோடியை சந்தித்தது அவரிடத்தில் எத்தகைய எண்ணங்களைத் தோற்றுவித்தன என்பது தெரியாது.

மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய தலைமைகள் இவ்வாறு பிரிந்து நின்று தனித்தனியே ஒரே சமூகத்தின் பணி செய்த அதேசமயம் பாராளுமன்ற உறுப்பினர்களான ஆர். யோகராஜன் மற்றும் பி. இராஜதுரை ஆகியோரை இணைத்துக் கொள்ளாதது ஒரு பெருங்குறைபாடாகும்.

இன்றைய சூழ்நிலையில் மலையகத்தை பொறுத்தவரையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் உள்ள போது மோடியுடனான சந்திப்பின் போது இருவர் கழட்டிவிடப்பட்டவர்களாகிவிடடனர். பொது நோக்கு கொண்ட ஒரு வேலைத்திட்டத்தில் கட்சி ரீதியான கொள்கைக்கு இடமளிப்பதை விட சமூகத்தின் பாலான கொள்கைக்கு முன்னுரிமையளிப்பதே சிறந்தது.

மலையக தலைவர்கள் அனைவருமே காலத்துக்கு காலம் ஏதோவொரு விடயத்தை முன்னிலைப்படுத்தி அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று அறைகூவல் விடுக்கின்றனர். ஆனால் யார் யாரோடு ஒன்றிணைவது என்றதொரு ஏற்றத்தாழ்வுடனான போட்டித்தன்மையொன்றும் அகலாது நிலைத்து நிற்கின்றது.

அந்த வகையில் நோக்கினால் மோடியுடனான சந்திப்பினைகூட அனைத்து மலையக கட்சி தலைமைகளும் இணைந்து மேற்கொண்டிருந்தால் அது பலமானதாகவும் அதேநேரம் வெற்றியானதாகவும் அமைந்திருக்கும். இருப்பினும் இவ்விடயத்தில் தவறு இழைக்கப்பட்டாகிவிட்டது.

தமது அரசியல் இருப்புக்கள், போட்டிகள், பொறாமைகள், ஏற்றத்தாழ்வுகள் அனைத்தையும் ஒருமிக்கதாய் பயன்படுத்தி அப்பாவி மக்களை சிதறடிப்பதும் அவர்களை சீரழிப்பதும் ஏற்கத்தகாத காரியமாகும். இன்று மலையகத்தில் அரசியல் போட்டி பொறாமைகள் தலைவிரித்தாடுகின்றன. அடுத்தவரை வீழ்த்தி அரியாசனம் ஏறவேண்டும் என்ற நிலைப்பாடு காலூன்றியுள்ளது. இதன் வெளிப்படைத்தன்மையை இன்று மக்கள் அறிந்து புரிந்து வருகின்றனர். தோட்ட தொழிலாளர்கள் இன்று மிகவும் ஆழமாக சிந்திக்க தொடங்கிவிட்டனர். அதன விளைவுகளையே தேர்தல்களில் எடுத்துக்காட்டி வருகின்றனர்.

அந்த வகையில் அடுத்து வரும் தேர்தல்களின் போது இனிவரும் அனைத்து செயற்பாடுகளிலும் தோட்டத் தொழிலாளர்கள் சிந்தித்தே செயற்படுவார்கள் என்பதை எவரும் மறந்து செயற்படக்கூடாது.

மலையக சமூகத்தின் பிரச்சினைகளை உண்மைத்தன்மையாக எடுத்துரைப்பதில் மலையக தலைமைகளிடத்தில் இராஜதந்திர ரீதியிலான அணுகுமுறை அவசியமே தவிர அதனை விடுத்து பகட்டுக்காக செயற்படுவதோ தம்மால் மாத்திரமே அனைத்தும் முடியும் என்ற ரீதியில் ஏகாதிபத்தியவாத முடிவுகளை மேற்கொள்வதோ சிறந்ததாகாது. அணுகு முறைக் கொள்கை எனும போது தரப்புக்கள் ஓரணியாய் நிற்க வேண்டும். பிரிந்து நின்று தனித்து நின்று ஆற்றும் கருமம் எப்போதும் வெற்றியளிக்காது. ஒரு கை ஓசை என்பது நிஜத்தில் பூச்சியமே.

பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்து மலையக சமூகத்தைப்பற்றி சிந்தையில்லாது சென்றுவிட்டார் என்ற மனத்தாங்கல் ஒருபுறமிருக்க மலையக சமூகம் தொடர்பிலான நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படவில்லை என்றும் தகவல்கள் தெரியாது என்றும் குறிப்பிட்டுள்ளதுடன் மலையக சமூகத்தின் குறைகளை டில்லிக்கு வந்து கூறுமாறு கூறிச் சென்றிருப்பது வேதனையிலும் வேதனையானது.

இந்நிலைமைகளுக்கு இலங்கை அரசாங்கம், மலையக தலைமைகள் மற்றும் இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் கண்டியியிலுள்ள இந்திய உதவித்தூதரகம் என அனைத்து தரப்பினருமே பொறுப்புக் கூற வேண்டும். எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தி பின்னர் ஏமாற்றுகின்ற நிலைமை இந்திய பிரதமரின் இலங்கை விஜயத்தின் விடயத்திலும் மலையகத்துக்கு நேர்ந்திருக்கின்றது.

(முற்றும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப்பிரச்சினைகளை ஆராய செயலணி அமைக்க இணக்கம்!



## பிரதமர் ரணில் உறுதி

(கொழும்பு)

**கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து கொண்டிருக்கும் காணி பிரச்சினைகளை விசாரணை செய்து, அவற்றுக்கு உரிய நிவாரணங்களை வழங்க அதிகாரமிக்க விசேட செயலணி ஒன்றை அமைப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.**

அடுத்த வாரம் செயலணியினை அமைக்கும் பணியைதான் செய்யப் போவதாகவும் அது பற்றி கலந்தாலோசிப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலியை தொடர்பு கொள்வதாகவும் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் நீண்ட காலமாக தீர்க்கப்படாது தொடர்ந்து வந்த 21 காணிகள் தொடர்பான ஆவணங்களை முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் பிரதமரிடம் பாராளுமன்றத்தில் வைத்து ஏற்கனவே ஒப்படைத்திருந்தார்.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் இது போன்று தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகள் சம்பந்தமான ஆவணங்கள் தற்போது தயாராகி விட்டதனால் அடுத்தவாரம் விசேட செயலணி அமைக்கும் போது அவை சமர்ப்பிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த ஆவணங்களில் உள்ள விபரங்களை தற்போதுள்ள நிலவரங்களுக்கு ஏற்றவாறு மீளாய்வு செய்து புதிய தகவல்களையும் உள்ளடக்கியதான ஆவணங்களே தற்போது பிரதமரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இவ் ஆவணங்களைப் பரிசீலித்து நியாயமான தீர்வுகளை வழங்குவதற்காக சகல அதிகாரம் பொருந்திய ஒரு விசேட செயலணியை அமைக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதமரைக் கேட்டிருந்தது. அரசியல் மற்றும் இனவாத நோக்குடன் கிழக்கு மாகாணத்தில் கடமை புரிந்த உயர் அதிகாரிகள் யுத்த பின்னணியை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொணடு இக் காணிப் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுகளை வழங்காது இழுத்தடித்து வந்துள்ளனர்.

இவ்வாறான அவலநிலையைக் காரணமாகக் காட்டியே விசேட செயலணியை அமைத்துத் தருமாறும் 100 நாள் வேலைத்திட்டத்திற்குள் இதனை அமுல்படுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சிகிரியாவினைப் பார்வையிடச்செல்லும் தமிழர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி



(கொழும்பு)

சிகிரியாவை பார்வையிடச் செல்லும் தமிழ் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் பாரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக குறித்த பிரதேச வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

சிகிரியா குன்றுக்குச் செல்லும் நுழைவாயிலுக்கு அருகாமையில் காணப்படும் வாகனத் தரிப்பிடத்தை மையமாகக் கொண்டு இயங்கி வரும் வர்த்தகர்களே இதனைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒரு மாத காலமாக சிகிரியா செல்லும் தமிழ் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் யுவதி சிகிரியா கண்ணாடிச் சுவரில் கிறுக்கியமைக்காக இரண்டாண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட தனைத் தொடர்ந்து இவ்வாறு தமிழர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் தொடர்பிலான சட்ட திட்டங்கள் பற்றி போதிய தெளிவின்மை காரணமாக, தமிழ் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பாடசாலை மாணவ மாணவியர் ஐயம் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியானது வருமானத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# எதிர்க்கட்சியின் கடமையை ஆற்றிக் கொண்டே நாம் அமைச்சு பொறுப்புக்களையும் வகிப்போம்

## அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவிப்பு



எதிர்க்கட்சியின் கடமைகளை ஆற்றிக்கொண்டே அமைச்சுப் பொறுப்புக்களையும் வகிப்போம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் அண்மையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

இதன்படி, எமது உறுப்பினர்கள் சிலர் தேசிய அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தனர்.

இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே அமைச்சர்களாக இவர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

நானும், நிமால் சிறிபால டி சில்வா மற்றும் ஜோன் செனவிரட்னவும் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்காது கட்சியினதும் நாடாளுமன்றத்தினதும் பொறுப்புக்களை ஆற்றத் தீர்மானித்தோம்.

இதன்படி, முன்னாள் அமைச்சர்களை மாவட்ட ரீதியில் தெரிவு செய்து அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு நாம் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

நாம் தான் எதிர்க்கட்சியின் ... பணிகளை ஆற்றவுள்ளோம். இதனால் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளவில்லை.

எதிர்க்கட்சியின் கடமைகளை ஆற்றிக் கொண்டே இந்த அமைச்சுப் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப் ... (இ-5)

# இன்று ஒரு தகவல்

## தூக்கம்

என்னுடைய நண்பர் ஒருவர் அடிக்கடி ஒரு விடயத்தைச் சொல்லி அலுத்துக்கொள்வார். என்னவென்று கேட்டால் நானும் 8 மணி நேரத்திற்குக் குறையாமல் தூங்குகிறேன் சேர். ஆனால் தூங்கி எழுந்ததற்கான திருப்தியே ஏற்படுவதில்லை. ஒரு சுறுசுறுப்பு இருப்பதில்லை. ஏன் இந்த மாதிரி ஒரு நிலைமை என்று அடிக்கடி சொல்வார். அப்பொழுது அவருக்குச்சில ஆலோசனைகள்சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அது சம்பந்தமாக மருத்துவர்கள், மனோதத்துவ நிபுணர்கள் சொல்கின்ற கருத்துக்கள் இருக்கிறதே அதில் இருக்கிற சில விடயங்களை அவருக்குச் சொன்னேன். அதுமட்டுமல்ல இந்த நேரத்தை மிச்சப்படுத்துவது என்பதில் இந்தத் தூக்கத்தைப் பற்றிய கணிப்பு நமக்கு அவசியம் தேவைப்படுகிறது. நன்றாக அயர்ந்து தூங்குகிற இந்தப் பழக்கம் உள்ளவர்களுக்கு இந்த 8 மணிநேரத் தூக்கமே தேவையில்லை. அலார கடிகாரத்தின் தூண்டுதல் இல்லாமலே சுறுசுறுப்பாக எழுந்து கொள்கிறவர்கள் நல்ல விதமான ஓய்வு பெற்றார்கள் என்று அர்த்தம். படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போதே ஒருத்தருக்குச் சிரமமாக இருக்கிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். அவர் இன்னும் அந்த உபாதையில் இருக்கிறார் என்று அர்த்தம். உடம்பில் அவருக்குச் சக்தி குறைந்திருக்கிறதென்று அர்த்தம். உறக்கத்தில் முதல் இரண்டு மணி நேரத்திற்குத்தான் தூக்கமானது ஆழ்ந்த தூக்கமாக இருக்கும். அந்தத் தூக்கம்தசைகளை இளைப்பாற்றும். இரத்தஅழுத்தத்தைக் குறைக்கும். உறக்கத்திற்குப் போவதற்கு முன்னர் வெதுவெதுப்பான சுடுநீரில் குளிக்கிறது ரொம்ப நல்லது. உறக்கம் எளிதாக வரும். சுடுநீர் குளியல் இருக்கிறதே இரத்த ஓட்டத்தை இயல்பாக்கும். சாந்தமுறச் செய்யும். குளிக்கும் போது சருமத்தைத் தேய்ப்பதற்குப் பதிலாக இலேசாகத் தட்டிக் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். உறங்கும் இடத்தில் வெளிச்சம் இருக்கக்கூடாது. நிசப்தமாக இருக்கவேண்டும். நீங்கள் எத்தனை மணிநேரம் படுக்கையில் இருந்தீர்கள் என்பது கணக்கில்லை. உங்களுடைய உறக்கத்தின் தரம்தான் முக்கியம். இதற்கு உடற்பயிற்சி உதவியாக இருக்கும் என்று சொல்கிறார்கள். 8 மணிநேரம் தான் உறங்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

அதிகம் உறங்குவது தேவையினால் அல்ல. வழக்கத்தினால் என்று சொல்கிறார்கள். நாம் நினைத்தால் அந்த வழக்கத்தை மாற்றிக்கொள்ள முடியும்.ஒருவர் 9 மணி நேரம் உறங்குகிறார் என்று வையுங்கள். அதில் அவர் ஒரு மணிநேரத்தைக் குறைக்கலாம். அலாரம் வைத்து எழும்பலாம்.முதலில் கொஞ்சம் சிரமமாக இருக்கும். பின்பு போகப் போகப் பழக்கமாகிவிடும். அந்த அளவுக்குள்ளேயே நிம்மதியாகத் தூங்குவது எப்படியென்று ஒரு பழக்கத்துக்கு அவர் வந்திருப்பார். பின்பு இன்னொரு மணிநேரத்தைக் கூடக் குறைக்கலாம். அதை அப்படிப் பழக்கத்திற்குக் கொண்டு வந்தோமென்றால் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் சரியாக, அமைதியாக முறையாகத் தூங்குவது எப்படி எப்படியென்று ஒரு பழக்கம் நமக்குள் வந்துவிடும். தூக்கமின்மை என்பது ஓர் உபாதை என்று சொல்கிறார்கள் . நல்ல தூக்கம் இல்லாமற் போய்விட்டால் நம்முடைய படைப்பாற்றல் குறையும். நம்முடைய நினைவாற்றல் குறையும். நம்முடைய செயற்பாடுகளில் வேகம் குறையும்.

தூக்கம் கெடுகிறதா? இதோ சில ஆலோசனைகள். நன்றாகத் தூங் கப் பழகிக்கொள்ளுங்கள், உடலுக்கு நல்ல ஓய்வும் மனதிற்கு அமைதியும் தேவை,பகல் பொழுதை நன்றாகக் கழித்தால் இரவில் நன்றாகத் தூங்கலாம்,இரவில் எந்தப் பிரச்சினைகளையும் மனதில் போட்டுக் கொள்ள வேண்டாம். விடிந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவிடுங்கள், பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் படுத்துறங்கி குறிப்பிட்ட நேரத்தில் எழுந்திருக்கப் பழகுங்கள்.

இரவு படுக்கச் செல்லும்போது வயிறு நிறையச் சாப்பிட வேண்டாம். பழங்களும் இலேசான ஆகாரமும் இரவுத் தூக்கத்தைப் பாதிக்காது. உறங்கும்முன் வெதுவெதுப்பான தண்ணீரில் வாசனைத் திரவியங்களைச் சேர்த்துக் குளிக்கலாம். உறங்கப்போகும் முன் சூடான பால் அருந்தலாம். இரவில் சற்று காற்றாட வெளியே உலாவி விட்டு வரலாம். அந்த இரவு நேர மென்மையான காற்று தூங்குவதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும். நீங்கள் படுக்கும் படுக்கையில் கவனம் தேவை. உங்கள் முதுகுப்பகுதி, இடுப்பு, தோள்பட்டை, கால்கள் எல்லாம் சமச்சீரான நிலையில் இருக்கும்படி படுத்துக்கொள்ளவும். உடம்பின் எந்தப்பகுதியிலும் இறுக்கம் (டென்சன்)கூடாது.

தலையணை வைத்துக்கொள்வதிலும்கவனம் தேவை. ஒன்றுக்கு மேல் தலையணை இருந்தால் தலைவலி, கழுத்து, தோள் பட்டை வலி வரலாம். அதிகம் உயரம் இல்லாமல் கழுத்துப்பகுதி சமச்சீராக இருக்கும்படி தலையணை இருந்தால் நல்லது. குறட்டை விடும் பழக்கமுடையவர்கள், மூச்சுவிடத் திணறுபவர்கள், இதய நோயாளிகள் சற்றே மார்பை உயர்த்தியவாறு படுத்துக்கொள்ளலாம். இதனால் கழுத்தும் முதுகுத்தண்டும் நேராகஇருக்கும். படுக்கையில் இதமான நிலையில் (Posture) படுத்துக் கொள்ளுங்கள். படுக்கும் அறை நன்கு காற்றோட்டமுள்ளதாக இருக்கட்டும். மூச்சு முட்டும்படியாக ஜன்னல் கதவுகளை அடைத்து வைக்காதீர்கள். படுத்ததும் தூக்கம் வராவிட்டால் அதற்காகக் கவலைப்படவேண்டாம்.தூக்கம் வரும்போது வரட்டும் என்று கண்களை மூடியவாறு அமைதியாகப் படுத்திருங்கள்.

தூக்கம் வரவில்லை என்று விளக்குகளைப் போட்டு விழித்துக் கொண்டிருக்கவேண்டாம். இருட்டில் சற்றுநேரம் கண்களை விழித்தவாறு படுத்திருங்கள். சற்று நேரத்தில் உங்களை அறியாமலேயே தூங்கிவிடுவீர்கள். உடம்பு உபாதை அதிகம் இருந்தால் வைத்தியரைக் கலந்தாலோசியுங்கள். தூங்கப் போவதற்கு முன்னர் சிறிது நேரம் தியானம் செய்தோமென்றால் மன அமைதியான ஒரு தூக்கம் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். தூக்கம் வரவில்லை என்பதற்காக தூக்க மாத்திரை போடும் பழக்கம் இருக்கக் கூடாது. அது உடலுக்கு ரொம்பக் கேடு. ஆனால் சில நோயாளிகளைத் தூங்க வைப்பதற்காக தூக்க மாத்திரைகளை டாக்டர்களே போடச் சொல்வார்கள். சில நேரங்களில் குறிப்பிட்ட நேரத்திற்குத் தான் அதைப்போடவேண்டும்.

ஒரு டாக்டர் நோயாளியுடைய மனைவியிடம் தூக்கமாத்திரை யைக் கொடுத்தார். அவ்வப்போது இந்த மாத்திரைகளை நீங்கள் பயன்படுத்த வேண்டும் என்று . சரி எத்தனை மணிக்கு என் கணவ ருக்கு இதைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டார். இது உங்கள் கணவருக்கு இல்லை .உங்களுக்குத்தான். தொணதொணஎன்று உங்கள் நச்சரிப்பு இல்லாமல் இருந்தாலே அவர் தூங்கிவிடுவார் என்றார் டாக்டர்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை!

# தீருமா?

“தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்”, “மீன்பிடி வலைகள் அறுக்கப் பட்டன”, “மீனவர்கள் சிறைபிடிப்பு”, “கண்டித்து மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை”, “தமிழக முதல்வர் மீனவர் விடுதலை குறித்து பிரதமருக்கு கடிதம்”, அதே கி.பி. 2215 “மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு” மத்திய அமைச்சர் உறுதி, என இன்னும் 200 வருடமானாலும் தீர்க்க முடியாத கன்னித்தீவு கதைபோல மீனவர் பிரச்சினை நீண்டு கொண்டே போக காரணம் என்ன?



எல்லை தாண்டும் தமிழக மீனவர்களை சுடுவோம் என ரணில் கூறியிருப்பதை கண்டிப் போம். அதேநேரத்தில், நமது தரப்பின் தவறுகளையும் பார்ப் போம்...

மீன் பிடிப் படகுகளில் Trawler boats என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகின்ற இழுவைப் படகுகள் என்று ஒருவகை உள்ளது. அதேபோல மீன்பிடிக்கப் பயன்படுத்துகின்ற வலைகளில் மடிவலை என்று ஒரு வகை உள்ளது. இந்த இழுவைப் படகுகளிலிருந்து மடிவலையை வீசி இழுக்கும்போது அந்த வலை கடலின் தரைப்பகுதி வரையில் சென்று படிந்து இறால் போன்ற ஆழத்தில் வாழ்கின்ற மீன் வகைகளை இழுத்துக் கொண்டு வருகிறது.

இதில் இருக்கின்ற எதிர்மறை அம்சம் என்னவென்றால் மடிவலை வளர்ந்த மீன்களை மட்டும் இழுத்து வருவதில்லை. குஞ்சுகளையும் குளுவான்களையும், ஏன்முட்டைகளையும்கூட இழுத்துக் கொண்டு வருகின்றது. வலையில் சிக்கியிருக்கின்ற இறால்கள் நல்ல விலையைப் பெற்றுத் தருகின்றன. மற்றவை எல்லாம் கழிவுகளாகிப் போகின்றன. குஞ்சுகளும், முட்டைகளும் கழிவுகளாகிப் போனால் அடுத்த மீன் வளம் எங்கிருந்து வரும்..?

இந்த நிலையில், தங்கள் பகுதியில் அதிக வருமானம் தருகின்ற இறால் மீன் வளம் குறைந்து விட்டதால், வேறு வழியின்றி அவை அதிகமாக உள்ள இலங்கையின் கடல் பகுதி வரை சென்று தமிழக மீனவர்கள் மடிவலையைப் பயன்படுத்தி மீன பிடிக்கும்போது அதனால் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகக் கருதுகின்ற இலங்கை மீனவர்கள் அங்கே வந்து அவர்கள் மீது தாக்குதல்நடத்துகிறார்கள்.

இதற்கு இருதரப்பு பேச்சு வார்த்தையில் இலங்கை விட்டு கொடுததால் மட்டுமே முடியும். இல்லாவிட்டால் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாக மீனவர் மீது தாக்குதல் என தொடக்கத்திலே சொனனது போல் தொடரும்...

**(யூனியர் விகடன்)**

# ஐஸ் தண்ணீர் ஆபத்து!

“ஆஹா... ஐஸ் வாட்டர்!” என மடக்..மடக்கென்று அருந்து பவர்களா நீங்கள்...? எனது வாட்ஸ் அப்பில் வந்த இந்த “பகீர்” தகவல் இது....

கோடை வெயில் உச்சி மண்டையை பிளக்கிறது. சுட்டெரிக்கும் வெயிலில் வெளியில் எங்காவது சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தால் நம் கை பிரிட்ஜில் உள்ள ஐஸ் வாட்டரைத்தான் தேடும்.

குளிர்ந்த தண்ணீரை குடித்தால் வெயிலின் களைப்பு சட்டென காணாமல் போவதோடு, குளுமை நம்மை வருடும்.

ஆனால் ஐஸ் தண்ணீரை குடிப்பதால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதாக மருத்துவர் எச்சரிக்கிறார்கள்.

உணவு சாப்பிட்டவுடன் குளிர்ச்சியான தண்ணீரோ, குளிர்பானமோ குடிப்பவர்களுக்கு இதய, சிறுநீரக பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. உணவில் உள்ள எணணெய் துகள்கள், கொழுப்புகளில் இந்த குளிர்ந்த தண்ணீரால் அவை கெட்டியாகி ரத்த நாளங்களில் படிய வாய்ப்புள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தெர்டர்ந்து ஐஸ் வாட்டரை குடிப்பது புற்றுநோய்க்கும் வழி வகுக்கும். குளிர்ந்த தண்ணீரால் ஜீரணம் ஆவதில் சிக்கல் ஏற்படுகிறது. அதோடு கொழுப்பின் அளவு அதிகரிக்கவும் செய்கிறது.

மேலும் நெஞ்சு எரிச்சல், உயர் ரத்த அழுத்தம், சரும பாதிப்பு, வயிற்று வலி, பக்கவாதம், தலை வலி, மூளை உறைவு நோய், பற்கள் பாதிப்பு ஏற்படும்.



இதை அல்வா மூலம் எளிதாக கண்டறியலாம். அல்வாவை எடுத்து பிரிட்ஜில் வைத்துவிட்டு அரைமணி நேரம் கழித்துப் பார்த்தால் அதிலிருந்த எண்ணெய் பசை காணாமல் போயிருக்கும். மேலும் கெட்டியாக மாறி இருக்கும். அதிலிருந்த எண்ணெய் ஆங்காங்கே படிந்து வெள்ளை நிறமாக இருக்கும்.

இது போன்றுதான் குளிர்ந்த தண்ணீர் குடிக்கும்போது உணவில் உள்ள எண்ணெய் துகள்களும், கொழுப்பும் கெட்டியாக மாறிவிடும் என்கிறார்கள் மருத்துவர்கள். எனவே குளிர்ந்த தண்ணீரை தவிர்த்து வெந்நீரை பருகினால் ஆயுட்காலம் அதிகரிக்கும் என்று மருத்துவர்கள் அறிவுரை கூறுகின்றனர்.

ஆசியா கண்டத்தை சேர்ந்த ஜப்பானிய பெண்களின் சராசரி ஆயுட்காலம் 92. ஜப்பானிய ஆணகள் 84 வயது வரை வாழகின்றனர். இதற்கு காரணம் அவர்களின் உணவுப்பழக்க வழககம். அவர்கள் அதிகளவில் பச்சை காய் கறிகளையும்பழங்களையும் உணவில் சேர்த்து கொள்கின்றனர்.


மேலும் உணவு சாப்பிட்ட பிறகு வெந்நீர் மற்றும் கரீன் டீ அருந்துவது அவர்களின் ஆரோக்கியத்துக்கு காரண மாக அமைந்துள்ளது என ஆராய்ச்சியாளர் கள் தெரிவிக்கின்றனர்.

எனவே நாமும் ஐஸ் வாட்டர் குடிப்பதை தவிர்த்தால் ஆரோக்கியமாக வாழ்வதோடு ஆயுட் நாட்களையும் அதிகரித்துக்கொள்ள லாம். **(யூனியர் விகடன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன சிங்கப்பூரைத் தோற்றுவித்த லீ க்வான் யூ நேற்றுக் காலமானார்!

**நவீன சிங்கப்பூரைத் தோற்றுவித்த லீ க்வான் யூ உடல்நலக் குறைவால் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை காலமானார். அவருக்கு வயது 91. சிங்கப்பூரின் தந்தை என போற்றப்படும் லீ க்வான் யூ, உடல்நலக் குறைவால் அவதிப்பட்டு வந்த நிலையில் அவரது உயிர் அதிகாலை 3.18 அளவில் பிரிந்ததாக அந்நாட்டு பிரதமர் தனது அதிகாரபூர்வ வலைப்பக்கத்தில் தெரிவித்தார்.**



லீ, கடந்த மாதம் சிங்கப்பூர் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். 1965ஆம் ஆண்டு மலேசியாவிடம் இரு ந்து சிங்கப்பூர் விடுதலையடைந்த பிறகு தற்போதைய சிங்கப்பூருக்கான அடித்தளத்தை அமைத்த லீ, மக்கள் செயல் கட்சியை தொடங்கி அந்நாட்டின் முதல் பிரதமர் ஆனார். 1959 - 1990 பிரதமராக பதவிவகித்தார். இவரது ஆட்சிக் காலகட்டத்தில் பிரிட்டிஷிடமிருந்து முழு அதிகாரத்தை அந் நாடு பெற்றது.

31 ஆண்டுகள் பிரதமராக பதவி வகித்தார். துறைமுக நகரமாக மட்டுமே அறியப்பட்ட சிங்கப்பூர் பிரமிக்கும் வகையில் வர்த்தக நகரமாக உருமாறியது.


திறமையான, பொறுப்பான, நீடித்த முற்போக்கான சிந்தனையுடைய ஊழலைத் தடுக்கும் ஆட்சியாக அவரது ஆட்சிக் காலம் இருந்ததால் மக்கள் மத்தியில் அவர் சிறந்த தலைவராக திகழ்ந்தார்.


சுத்தமே முதல் நோக்கமாகக் கொண்ட அவர், ஆயிரக்கணக்கான தொண்டு நிறுவனங்களை அழைத்து, அவர்களுடன் இணைந்து, சிங்கப்பூரை சுத்தம் செய்தார். இதற்கு பின்னரே, சுத்தத்தின் மதிப்பையும் அவசியத்தையும் உணர்ந்த சிங்கப்பூர் மக்கள், அவரது வழியில் இன்று வரை நடந்து வருகின்றனர்.


ஆட்சியில் இல்லாத போதிலும் ஆளுமையுடன் திகழ்ந்த அவர் "உலகின் பாலைவனச் சோலை" என அனைவராலும் அழைக்கப்பட்டார்.

நிர்வாக செயற்பாட்டில் தொடர்ந்து பங்காற்றிய லீ, 2011 ஆம் ஆண்டு அமைச்சரவை செய ற்பாடுகளிலிருந்து விலகினார். சமீப காலமாக வயது மூப்பு காரணமாக பொது நிகழ்ச்சிகளிலும் பங்கேற்பதை தவிர்த்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தலைவர்கள் இரங்கல்







**சிங்கப்பூர் தந்தை லீயின் மறைவுக்கு உலகத் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இரங்கல் செய்தியில், "சிங்கப்பூர் தந்தையும் முன்னாள் பிரதமருமான லீ க்வான் யூ மரணமடைந்தது மிகவும் வேதனை அளிக்கும் தருணம்.

தொலைநோக்குப் பார்வையுடன் தலைவர்கள் மத்தியில் சிங்கமாகத் திகழ்ந்தவர். லீயின் வாழ்க்கை நமக்கு நிறைய பாடங்களை அளிப்பதாக இருக்கிறது. அவரது இழப்பு வருத்தமளிக்கிறது.

லீயின் குடும்பத்தினருக்கும் அம்மக்களுக்கும் நமது பிரார்த்தனை உடன் இருக்கும். லீயின் ஆன்மா சாந்தியடையட்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் மிச்சேல் ஒபாமா விடுத்துள்ள இரங்கல் செய்தியில், "லீயை இழந்து நிற்கும் சிங்கப்பூர் மக்களின் துயரத்தில் நாங்களும் பங்கேற்கிறோம். வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாமனிதர் அவர்.

மக்களுக்காக தனது வாழ்வை அர்ப்பணித்தவர். உலக நாடுகளில்சிங்கப்பூர் இன்று சிறந்து நிற்க காரணமானவர்" என்று தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் லீயின் மறைவுக்கு வருத்தம் தெரிவித்துள்ளார். இது குறித்து ஐ.நா. பொதுச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், " ஆசிய அரசியல் வரலாற்றில் உயரிய இடம் வகிப்பவர் லீ. சிங்கப்பூரை உருவாக்கி 50 ஆண்டுகளாகும் இந்தத் தருணத்தில் நம்மை விட்டு லீ பிரிந்தது வருத்தம் அளிக்கிறது. அவர் என்றும் நம் நினைவில் இருப்பார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)




# 530 வருடங்களுக்கு முன்னர் இறந்த மன்னர் உடல் அடக்கம்

(லண்டன்)

இங்கிலாந்தில் 530 வருடங்களுக்கு முன் உயிரிழந்த மூன்றாம் ரிச்சர்ட் என்ற மன்னரின் உடல் நேற்று முன்தினம் தான் முறையாக அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

பிரான்சில் இருந்து இங்கிலாந்து வந்து குடியேறிய பிளான்டஜெனட் என்ற ஒரு பிரிவினர் அங்கு லீசெஸ்டர் என்ற பகுதியை 1154 முதல் 1485 வரை ஆண்டு வந்திருக்கிறார்கள்.

அந்த வம்சத்தின் கடைசி மன்னராக இருந்த மூன்றாம் ரிச்சர்ட், 1485 இல் நடந்த ஒரு போரில் இறந்து விட்டார். அவரது உடலை அப்போது உள்ளவர்கள், ஒரு சவப்பெட்டி கூட வைத்திருக்காமல், ஒரு மரியாதையும் செய்யாமல் அப்படியே எங்கோ புதைத்திருக்கிறார்கள்.

2012இல் ஒரு புதைபொருள் ஆராய்ச்சியாளர், தற்செயலாக இவரது எலும்புகளை, கார்பார்க்கிங் ஒன்றின் அடியில் கண்டுபிடித்து எடுத்து லீசெஸ்டன் பல்கலைக்கழகத்தில் கொடுத்து இது மூன்றாம் ரிச்சர்ட் இன் எலும்புகள் தானா என்று கண்டுபிடிக்க வைத்திருக்கிறார்.

பல இரசாயன பரிசோதனைகளுக்கு பின் இது அவரது உடல் பாகங்கள்தான் என்று உறுதி செய்யப்பட்டது. அவரது உடல் பாகங்கள் ஒரு சவப்பெட்டிக்குள் வைக்கப்பட்டு, ஒருமன்னருக்குஉள்ளமரியாதையுடன் நேற்று முன்தினம் லீசெஸ்டரில் அடக்கம் செய்யப்பட்டது. (இ-5)

# சிறுவர் போராளிகள் 250 பேர் விடுதலை!

தெற்கு சூடானில் அரசாங்கத்திற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான அமைதி ஒப்பந்தத்தின் விளைவாக சிறார் போராளிகள் 250 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் தொடங்கப்பட்ட சிறார் போராளிகளின் விடுவிப்பு நடவடிக்கையின் மூன்றாவது கட்டமாக இந்தச் சிறார்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஜோங்லி மாகாணத்தை சேர்ந்த கோப்ரா கிளர்ச்சிக்குழுவுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் கடந்த ஆண்டு கைச்சாத்தான அமைதி ஒப்பந்தத்தின் விளைவாக இது நடக்கிறது.

கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள மேலும் 400 சிறுவர்கள் அடுத்த சில நாட்களில் விடுவிக்கப்படுவர் என்றும் இதுவரையில் நடந்த விடுவிப்புக்களில் மிகப் பெரிய விடுவிப்பாக அது இருக்கும் என்றும் இந்நடவடிக்கைகளுக்கு உதவி வரும் ஐ.நா.வின் சிறுவர்களுக்கான அமைப்பான யுனிசெப் தெரிவித்துள்ளது. (இ-5)

# இந்திய இராணுவம் குறித்த விபரங்களைத்திருட முயற்சி

சீனா, பாகிஸ்தான் நாடுகளின் உளவு அமைப்புகள் இணையத்தளங்கள் மூலம் இந்திய இராணுவ இரகசியங்களை திருட முய ற்சிப்பதாக பாதுகாப்புத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சகம் சார்பில் இராணுவம் மற்றும் பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. அதில்பாதுகாப்புத்துறை விபரங்களை கையாள்வதில் கூடுதல் கவனத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட் ள்ளது.

சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட வெளிநாட்டு உளவு அமைப்புகளும், தீவிரவாத அமைப்புகளும் நவீன தொழில்நுட்பங்களின் மூலம் பாதுகாப்புதுறை விரங்களை இணையத்தளம் வழியாக தெரிந்துகொள்ள தீவிரமாக முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பாதுகாப்புத்துறை இணையத்தளங்களிலும், கணனிகளிலும் சைபர் குற்ற தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் விபரங்களை இறுவெட்டு, சேமிப்புக்கருவி போன்ற சாதனங்கள் மூலம் பரிமாறிக் கொள்வதை தவிர்க்குமாறும் இணையத்தள இணைப்புகளை அவ்வப்போது பரிசோதித்து பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-5)


# மின்சக்தியில் பறக்கக்கூடிய விமானம் நாஸா விஞ்ஞானிகளால் வடிவமைப்பு

(வோஷிங்டன்)

மின் சக்தியில் இயங்கும் 18 விசைகளைப் பொருத்திய இறக்கை கொண்ட விமானத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா வடிவமைத்துள்ளது.

இந்த இறக்கையின் சோதனையோட்டத்தை இவ்வாண்டு இறுதியில் நடத்த நாஸா திட்டமிட்டுள்ளது.

18 விசைகள் (புரொபெல்லர்) பொருத்திய விமான இறக்கையின் மாதிரி வடிவை ஒரு வாகனத்தில் (படம்) பொருத்தி, அதனை மணிக்கு 112 கி.மீ. வேகத்தில் நிலத்தில் செலுத்தி சோதனை நடத்தப்படும்.



எதிர்காலத்தில் முற்றிலும் மின் சக்தியிலேயே செலுத்தக்கூடிய விசைகளைக் கொண்ட விமானங்களை உருவாக்க இந்த சோதனை உதவும் என நாஸா மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்று நீரைப் பயன்படுத்த முடியுமாயென தெளிவாக அறிவிக்க வேண்டியது அவசியம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.வலிகாமம் தெற்கு பிரதேச சபைப்பிரிவில் குடிநீர் கிணறுகளில் கலந்துள்ள எண்ணெய் மாசு தொடர்பில் பொதுமக்களுக்கும் குடிநீர்க்கிணற்று பாவனையாளர்களுக்கும் தனித்தனியே பரிசோதனை அறிக்கைகளுடன் கிணற்று நீரைப் பயன்படுத்த முடியுமா இல்லையா என்பதை தெளிவாக அறிவுறுத்த வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்வதாக வலி.தெற்கு பிரதேசசபை தலைவர் தி.பிரகாஸ் தெரிவித்துள்ளார்.**

நீர் விநியோகம் தொடர்பில் அவர் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுவான முடிவுகளின் அறிவிப்பால் மக்கள் குழப்பமடைந்து தெளிவற்று காணப்படுகின்றனர். சாதாரண அவதானிப்பிலும் தனித்தனியே மேற்கொள்ளப்பட்ட நீர் மாதிரிப்பரிசோதனை அறிக்கைகளின் அடிப்படையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான குடிநீர் விநியோகம் எமது பிரதேசசபையாலும், மாகாண சபையாலும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தெளிவான அறிவுறுத்தலுடன் கூடிய அறிக்கை பாவனையாளருக்கு கையளிக்கப்பட்டு மக்கள் இயல்பான நிலைக்கு வரும்வரை எமது குடிநீர் விநியோகம் எவ்வித தடையுமின்றி தொடரும். நீர்த்தாங்கிகளையும் நீர் விநியோகப் பணிகளை மேற்கொள்பவர்களையும் நீரையும் பாதுகாத்து பயன்படுத்த வேண்டியது அனைத்து தரப்பினரதும் கடமையும் பொறுப்பாகும்.

பொதுமக்களும் பொது அமைப்புகளும் எமக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

குடிப்பதற்கு உகந்த நீரே எம்மால் விநியோகிக்கப்படுகின்றது. விநியோகிக்கப்படும் தாங்கிகளிலுள்ள நீர் குடிநீர்ப்பாவனைக்கு உகந்ததல்ல என பொதுமக்கள் கருதும் பட்சத்தில் அதனைப்பருக வேண்டாம். உடனடியாக இது தொடர்பில் பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கோ அல்லது சுகாதார வைத்திய அதிகாரிக்கோ அல்லது கிராம அலுவலருக்கோ அல்லது பிரதேச செயலருக்கோ தெரியப்படுத்துங்கள்.

பொதுமக்கள் தம் குடிநீர் விநியோகம் தொடர்பில் கருத்துக்கள் தெரிவிப்பதற்கு 0212240017 என்ற எமது பிரதேசசபை தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். ஆரம்ப காலத்தில் எமது பிரதேச மக்கள் எவ்வாறு சுத்தமான குடிநீரைப் பருகினார்களோ அதே மாதிரியான நிலைமை ஏற்படுத்தப்படல் வேண்டும்.

அதுவரை பொது மக்களுக்கான எமது சேவை பல்வேறு வழிகளிலும் தொடரும். பொதுமக்கள் எமக்கு பூரண பங்குபற்றுதலுடன் கூடிய ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-5)

## ஈழத்தமிழர்கள் மீது பேரன்பு கொண்டிருந்த தந்தை லீ க்வான் யூவை இழந்து விட்டோம்!

### கருணாநிதி இரங்கல்



ஈழத் தமிழர்கள்பால் பேரன்பு கொண்டிருந்த லீ க்வான் யூ ஈழத் தமிழர்கள் மிகப் பெரும் உழைப்பாளிகள். அவர்கள் தமது போராட்டத்தில் நிச்சயம் வெற்றியடைவார்கள் என்று மனம் திறந்து குறிப்பிட்டதை உலகத் தமிழர்கள் என்றென்றும் மறக்கமாட்டார்கள் என நவீன சிங்கப்பூரின் தந்தை லீ க்வான் யூவின் மறைவையொட்டி தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அவ் இரங்கல் செய்தியில் தெரிவித்திருப்பதாவது, சிங்கப்பூர் நாட்டின் முதல் பிரதமராக 1959ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட லீ க்வான் யூ, 31 ஆண்டுகள் தொடர்ந்து அந்த நாட்டின் முடிசூடா மன்னராக விளங்கி, நவீன சிங்கப்பூருக்கான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திய பெருமகன் ஆவார்.

வெறும் துறைமுக நகரமாக இருந்த சிங்கப்பூர் இவரது ஆட்சிக் காலத்திலே தான் உலகமே பிரமித்திடும் வகையில் மிகப் பெரும் வர்த்தக நகரமாக மாறியது.

ஆங்கில அரசிடமிருந்து சிங்கப்பூர் விடுதலை பெறுவதற்கும், மலேசியாவிலிருந்து பிரிந்து சுதந்திர நாடாக இருப்பதற்கும் முக்கிய காரணகர்த்தாவாக விளங்கியவர் தான் லீ க்வான் யூ . உண்மையில் சுதந்திரச் சிங்கப்பூரின் வரலாற்றைத் தொடங்கி வைத்தவரே லீ க்வான் யூ தான்.


சிங்கப்பூரில் தமிழர்கள், சீனர்கள், மலேசியர்கள் ஆகிய மூன்று தேசிய இனங்களையும் ஒருங்கிணைத்து, அவர்களின் பாசத்தையும், பேராதரவையும் பெற்றவர் இவர். தமிழ், சிங்கப்பூரில் ஆட்சி மொழிகளில் ஒன்றாக இருப்பதற்குக் காரணகர்த்தாவும் லீ க்வான் யூதான்.

பேரறிஞர் அண்ணா 1965ஆம் ஆண்டு சிங்கப்பூர் சென்றிருந்த போது, பிரதமர் லீ க்வான் யூ, தன்னுடைய அமைச்சர் பெருமக்களோடு உற்சாகமான வரவேற்பளித்ததோடு, அறிஞர் அண்ணாவின் பேருரையைக் கேட்டு ஆனந்தமடைந்த நிகழ்வு என் நெஞ்சில் இன்றும் நிலைத்திருக்கிறது.

ஈழத் தமிழர்கள்பால் பேரன்பு கொண்டிருந்த லீ க்வான் யூ ஈழத் தமிழர்கள் மிகப் பெரும் உழைப்பாளிகள். அவர்கள் தமது போராட்டத்தில் நிச்சயம் வெற்றியடைவார்கள் என்று மனம் திறந்து குறிப்பிட்டதை உலகத் தமிழர்கள் என்றென்றும் மறக்கமாட்டார்கள்.

சிங்கப்பூர் வரலாற்றில் மிகப் பெரிய நாயகனாக வாழ்ந்து, சிங்கப்பூர மக்களின் தந்தையாகத் திகழ்ந்த லீ க்வான் யூவின் மறைவினால் வாடும் சிங்கப்பூர் நாட்டு மக்களுக்கும், குறிப்பாக அவருடைய குடும்பத்தினருக்கும், உலகெங்கிலும் வாழும் அவரு டைய நண்பர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியுள்ளார். (இ-5)

## ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு!



பிறப்பால் தமிழர் இல்லாவிட்டாலும் தமிழர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த லீ க்வான் யூவின் மறைவு தமிழர்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் இரங்கல் செய்தியில் தெரிவித்திருப்பதாவது, சிங்கப்பூரை உருவாக்கியவரும், தமது வாழ்நாளின் கடைசி நிமிடம் வரை அந்நாட்டின் வளர்ச்சிக்காக உழைத்தவருமான லீ க்வான் யூ காலமானார் என்ற செய்தி கேட்டு பெரும் அதிர்ச்சியும், வேதனையும், துயரமும் அடைந்தேன்.

சிங்கப்பூர் நாட்டின் பிரதமராக 31 ஆண்டுகள் பதவி வகித்தவர். அதற்குப்பிறகும் இவர் கைகாட்டுபவர் தான் அந்நாட்டின் பிரதமராக முடியும் என்ற நிலை நிலவுகிறது. ஆனால், அவ்வளவு செல்வாக்கு இருந்தும் எளிமையின் சின்னமாக திகழ்ந்தவர்.

சிறிய நாடான சிங்கப்பூரை அந்நாட்டின் பொருளாதாரம் பாதிக்காத வகையில் உலகின் சந்தையாக மாற்றி மக்களின் வளமான வாழ்க்கைக்கு வழி வகுத்தவர். சிங்கப்பூரில் வாழும் தமிழர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பில் அக்கறை காட்டியவர். தமிழை சிங்கப்பூரின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவித்து மரியாதை செய்தவர்.

ஈழத்தமிழர் நலனில் அக்கறை கொண்டவர். ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய இந்திய ஆட்சியாளர்கள் இலங்கையில் அப்பாவி தமிழர்கள் கொல்லப்பட்டதை தீவிரவாத ஒழிப்பு என்று வர்ணித்த நிலையில், அது இனப்படுகொலை என்று துணிச்சலுடன் கூறிய தலைவர் லீ க்வான் யூ மட்டுமே.

அதுமட்டுமின்றி, "இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு சிங்களத் தீவிரவாதி, அவரைத்திருத்த முடியாது. ஈழத்தமிழர்களை சிங்களத்தால் வீழ்த்தி விட முடியாது. இலங்கை ஒற்றை நாடாக இருக்கும் வரை மகிழ்ச்சியாக இருக்க முடியாது. அந்நாட்டு பிரச்சினைக்கு தமிழீழம் தான் தீர்வு" என பல ஆண்டுகளுக்கு முன்பே கூறியவர்.

பிறப்பால் தமிழர் இல்லாவிட்டாலும் தமிழர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த லீ யின் மறைவு தமிழர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அவரை இழந்து வாடும் சிங்கப்பூர் மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் மறைந்தாலும் அவரது புகழும், சாதனைகளும் என்றென்றும் வாழும். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.(இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### லுக்கேஸ்பிள்ளை மருசலின்

(இளைப்பாறிய ஆசிரியர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட லுக்கேஸ்பிள்ளை மருசலின் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாருக்கு இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 4 மணியளவில் இரங்கல் திருப்பலி சூராவத்தை புனித திரேசம்மா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### சோமசுந்தரம் பரமசாமி

(ஓய்வுபெற்ற அரச மொழிபெயர்ப்பாளர்)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பரமசாமி கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### அந்தோனிப்பிள்ளை பற்றிக் இம்மானுவேல்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியா கோவில்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பற்றிக் இம்மானுவேல் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாருக்கு இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 11மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி தம்பிராசா பூரணம்

கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று திங்கட்கிழமை பி.ப 5மணியளவில் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போன உறவுகளைத் தேடி...





(கிளிநொச்சி-1)

வடக்கு-கிழக்கில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கடத்தப்பட்டு காணாமற் போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றைய தினம் மிகப்பெரியளவில் அமைதி வழியிலான கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் அமைதி வழி கவனயீர்ப்பு போராட்டம் வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்திலும் நடைபெற்றுள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ9 வீதியிலுள்ள உதிரவேங்கை வைரவர் கோவிலில் இருந்து பேரணியாக சென்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்று பின்னர் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சத்தியசீலனிடம் ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்பட்டது.

இம் மகஜரை ஜனாதிபதியிடம் ஒப்படைப்பதாக மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை மன்னாரில் மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்திற்கு முன் குறித்த பேரணி ஆரம்பமாகி மன்னார் மாவட்டச் செயலக வதியூடாக சென்று மன்னார் மாவட்டச் செயலக பிரதான வீதிக்கு அருகாமையில் ஒன்று கூடினர். காணாமற் போனவர்களின் உறவினர்கள் பல்வேறு வசன ங்கள் எழுதப்பட்ட பதாகைகளை வைத்து அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற் கொண்டனர்.

பின் காலை 11.30 மணியளவில் ஊர்வலமாக சென்று மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரியவிடம் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட வேண்டிய மகஜரை கையளித்தனர்.

இதில் கலந்து கொண்ட காணாமற் போனவர்களின் உறவி னர்கள் இலங்கை அரசினால் ஏற்படுத்தப்பட்ட காணாமற் போன வர்கள் சமபந்தமாக விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழு வின் விசாரணைகளில் நம்பிக்கை இன்மையினை கண்டித்தும், காணாமற் போனவர்கள் தொடர்பில் உடனடியாக சர்வதேச தரத்தில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என கோரியும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.






வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற போராட்டங்களின் நிறைவில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களிடம் ஜனாதிபதிக்கான மகஜர் காணாமற் போனவர்களின் உறவினர்களால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-277)

# காணிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன

(திருவையாறு)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சாந்தபுரம் கிராமத்தில் உள்ள ஐம்பது குடும்பங்களுக்கு காணி பத்திரங்கள் (போமிட்) வழங்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்தை சேர்ந்த மக்கள் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் தமது காணிப்பத்திரங்களை பெற்றுள்ளனர்.

இக்கிராமத்தில் காணிப்பத்திரம் பெறாத சுமார் 300இற்கும் மேற்பட்ட மக்களின் பெயர் விபரங்கள் மாவட்ட செயலகத்தில் உள்ளதாகவும் இதில் 50பேருக்கே நேற்றைய தினம் முதற்கட்டமாக இப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேசங்களுக்கும் இக்காணிப் பத்திரங்கள் (போமிட்) வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-273)

# சந்தை வளாக வீதிகளுக்கு வீதித் தடையை அமைக்குக

## கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தை வளாகத்திற்குள் உள்ள வீதிகளுக்கு வீதித் தடைகள் போடப்பட வேண்டும் என பொதுமக்களும் சந்தை வர்த்தகர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வீதித் தடைகளை இச்சந்தை வளாகத்தினுள் போடாததன் காரணத்தால் பிரதான வீதிகளில் இருந்து சந்தைக்குள் வருகின்ற வாகனங்கள் மிக வேகமாக உள்நுழைவதால் விபத்துக்கள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த நிலையில் நேற்றும் சந்தை வளாகத்திற்குள் நுழைந்த மோட் டார் சைக்கிளை சந் தைக்குள் இருந்து வேகமாக பயணித்த இராணுவ வாகனம் மோதித்தள்ளியது.

இதில் கோணாவில் காந்தி கிராமத்தைச் சேர்ந்த மு.மகேஸ்வரன் (வயது-34) என்பவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச் சந்தை கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமானது என்பதால் சந்தை வீதிக்கு தடைகளை அமைக்க மேற்படி பிரதேச சபை முன்வரவேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

வீதித் தடையை அமைக்குமாறு பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென குற்றஞ்சாட்டப்படுகின்றது.

எனவே கரைச்சி பிரதேச சபை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென சந்தை வர்த்தகர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-271)




# எமக்கு ஆளணி கிடைத்ததும் சிறந்த சேவையாற்றுவோம்

## முல்லைத்தீவு சாலை முகாமையாளர் தெரிவிப்பு



இலங்கை போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சாலைக்கு புதிதாக வழங்கப்பட்ட 12 பேருந் துகளையும் கொழும்பு, புத்தளம், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாக முல்லைத்தீவு சாலை முகாமையாளர் கே.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி பகுதிகளுக்கு இதுவரை காலமும் சேவையில் ஈடுபடுத் தப்பட்ட பேருந்துகளை உள் ளூர் சேவையில் ஈடுபடுத்தவுள்ளோம். எமது சாலையில் ஆளணி பற்றாக் குறை நிலவுகின்றது.

ஆளணியினரைப் பெற்றுத் தருவதாக மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ் வரன் உறுதியளித்தார்.

ஆளணி கிடைத்ததும் சிறந்த சேவையை வழங்க முடியும் என்றார். (அ)

# மாபிள் பதித்தல் செயன்முறை பயிற்சி

(முல்லைத்தீவு)

இலங்கை தொழிற்பயிற்சி அதி கார சபையானது நூறுநாள் வேலைத்திட்டத்தின் கீழ் மாபிள் பதித் தல் செய்முறை, ஆட்டோ மோட்டார், சைக்கிள் திருத்தம் செய்யும் முறை, அழகுக் கலை பயிற்சி, தன் னியக்க இயந்திர திருத்துநர் முதலிய பயி ற்சி நெறிகளை செயலாக்கவுள்ளது.


இதன்படி மாபிள் பதித்தல் செயன் முறை லங்கா ரைல்ஸ் நிறுவனத் தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதியும் மறுநாள் 7 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்புவர்கள் அந்தந்த மாவட்ட தொழிற்பயிற்சி அதிகார சபை பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு அதிகார சபை யின் உதவிப்பணிப்பாளர் இரா. அகி லன் கேட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு பேரிழப்பு!

## லீ க்வான் மறைவு குறித்து வைகோ கருத்து



**சிங்கள அரசு ஈழத்தமிழர்களை ஒரு போதும் அழிக்க முடியாது என்றும் தமிழர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள் என்பதனால் இன அழிப்புக்கு எதிராக விடுதலைப்புலிகளின் ஆயுத போராட்டம் நேர்ந்தது என்றும் உலக நாடுகளில் வெளிப்படையாகச் சொன்ன ஒரேயொரு தலைவர் லீ க்வான் மட்டும்தான் என லீ க்வானின் மறைவையொட்டி ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள இரங்கல் செய் தியில் தெரிவித்துள்ளார்.**

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தென்கிழக்கு ஆசியாவில் சின்னஞ்சிறு தேசமான சிங்கப்பூரை உலகமே ஏறிட்டுப் பார்க்கும் உன்னத நிலைக்கு உயர்த்தியவரும், 'சிங்கப்பூரின் தந்தை' என அழைக்கப்பட்டவருமான அந்நாட்டின் முதல் பிரதமர் லீ க்வான் யூ மறைந்த செய்தி, அதிர்ச்சியையும் வேதனையையும் தருகிறது.

ஒரு நாட்டின் தலைவர் எப்படி மக்கள் சேவை புரிய வேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுத்தவர் லீ க்வான். பிரதமர் பதவி வகித்தபோதும், அந்நாட்டின் முதல் ஊழியன் என்ற உணர்வுடன் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி விண் முட்டும் புகழ்பெற்ற லீ க்வான், அங்கு வாழும்தமிழர்கள் மீது எல் லையற்ற அன்பு கொண்டு அவர்களின் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்தார்.

இலங்கை தீவில் கொடுந் துயருக்கு ஆளாகிய ஈழத்தமிழர்களின் நியாயத்தை உணர்ந்து சிங்களப் பேரினவாத அரசுக்கும் இனக் கொலை நடத்திய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் பகிரங்கமாகக் கண்டனம் தெரிவித்தார். இலங்கை தீவில் வாழும் ஈழத் தமிழர்கள், ஈழத்தின் பூர்வகுடி மக்கள் என்பதையும், சிங்கள இனவாதம் அவர்களை நசுக்கி அழிக்க முனைகிறது என்பதையும், நடைபெற்ற படுகொலைகள் தமிழின அழிப்பின் வெளிப்பாடு என்பதையும் உலகத்துக்குச் சொன்னார்.

சிங்கள அரசு, ஈழத்தமிழர்களை ஒருபோதும் அழிக்க முடியாது என்றும், தமிழர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள் என்பதனால்தான் இன அழிப்புக்கு எதிராக விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் நேர்ந்தது என்றும் உலக நாடுகளில் வெளிப்படையாக சொன்ன ஒரே ஒரு தலைவர் லீ க்வான் மட்டும்தான்.

தமிழர்களுக்காக ஓங்கி ஒலித்த அந்தக் குரல் அடங்கி விட்டது! அவர் மறைந்து விட்டார்! என்பது தாங்கமுடியாத துக்கத்தைத் தருகிறது. ஈழத் தமிழர்களும், சிங்கப்பூர் தமிழர்களும், தாய்த் தமிழகம் உள்ளிட்ட தரணிவாழ் தமிழர்களும் நன்றி உணர்வோடு அந்த மாபெரும் தலைவர் லீ க்வான் மறைவுக்கு கண்ணீர் அஞ்சலியை செலுத்தும் இந்த நேரத்தில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். லீக்வானின் புகழ்காலத்தால் அழியாது நிலைத்து இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-5)

## விவசாயிகளைத் தவறாக வழிநடத்துகிறார் பிரதமர்

### அன்னா ஹசாரே குற்றச்சாட்டு



நிலம் கையகப்படுத்தும் சட்டம் குறித்து விவசாயிகளை தவறாக வழி நடத்துவது பிரதமர் மோடிதான் என்று சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே குற்றஞ்சாட்டியுள்ளார்.

மனதின் குரல் என்ற நிகழ்ச்சி மூலம் விவசாயிகளிடம் பேசிய பிரதமர் மோடி, நிலம் கையகப்படுத்தும் சட்டம் குறித்து எதிர்க்கட்சிகள் தவறான தகவல்களை அளித்து, விவசாயிகளை தவறாக வழி நடத்துவதாகக் கூறியிருந்தார்.

இது குறித்து கருத்துக் கூறியிருந்த அன்னா ஹசாரே, மோடி சொல்வது போல இந்த சட்டம் விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காகக் கொண்டு வரப்படவில்லை. பெரு நிறுவனங்களுக்கு உதவி செய்வதற்காகவே கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (இ-5)

## 38 நாடுகளின் இராணுவ வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படுமாம்

38 நாடுகளை சேர்ந்த இராணுவ வீரர்களுக்கு இந்தியா பயிற்சி அளிக்கும் என்றும் இந்தியா பாதுகாப்பு உபகரணங்களை ஏற்றுமதி செய்ய திட்டமிட்டுள்ளது என்றும் மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் மனோகர் பரிக்கர் தெரிவித்துள்ளார்.

புவனேஷ்வரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் மனோகர் பரிக்கர், "சுமார் 38 நாடுகள், தங்களது இராணுவ வீரர்களை பயிற்சிக்காக இந்தியாவிற்கு அனுப்பி வருகின்றன. நாங்கள் அவர்களை ஊக்குவிக்கிறோம். அவர்கள் பயிற்சிக்கு நாங்கள் முன்னுரிமை கொடுக்கிறோம். நாங்கள் ஏற்றுமதி மூலம் குறிப்பிட்ட அளவு பாதுகாப்பு உபகரணங் களை வழங்கவும் அல்லது நாடுகள் தங்கள் பாதுகாப்புக்காக இந்தியாவில் சார்ந்திருக்கும் நிலையில், கடன் வரி மூலம் வழங்கவும் நாங்கள் பரிசீலனை செய்து வருகிறோம்." என்று தெரிவித்தார்.

பாதுகாப்பு காரணமாக எந்தெந்த நாடுகள் பயிற்சிக்காக தங்களது நாட்டு இராணுவ வீரர்களை இந்தியாவிற்கு அனுப்பியது என்பதை தெரிவிக்க முடியாது என்று மனோகர் பரிக்கர் தெரிவித்தார்.

நாம் நமது நிலையை மிகவும் வலிமையாக கட்டுவோம். இந்தியா எந்தஒரு நாட்டிடமும் ஆதிக்கம் செலுத்த விரும்பாது. கூட்டுறவு மற்றும் நட்புறவு மூலம் தனது பலத்தை அதிகரிக்கும். நாங்கள், விசாகப்பட்டினத்தில் ஒரு கடற்படை பயிற்சிக்கு ஏற்பாடு செய்து உள்ளோம்... இதில் சர்வதேச கடற்படை பங்கேற்கவுள்ளது. உட்கட்டமைப்பு பயிற்சி அடிப்படையில் இது ஒரு கண்கவர் நிகழ்ச்சியாக இருக்கும் என்றும் மனோகர் பரிக்கர் தெரிவித்தார்.

விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ள கடற்படை பயிற்சியில் சீனா பங்கு கொள்ளுமா? என்ற கேள்விக்கு மனோகர் பரிக்கர் பதில் அளிக்கையில், " நாங்கள் அழைப்பிதழ் விடுக்க உள்ளோம். இது வெளிப்படையான விவகாரம். பட்டியல் தயாரிக்கப்படுகிறது. நீங்கள் தெரிந்து கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி காலவரையறையற்ற வேலை நிறுத்தம்

### இராமேஸ்வரம், ஜெகதாப்பட்டினம் மீனவர்கள் ஆரம்பிப்பு



எல்லை தாண்டி மீன்பிடிக்க வந்ததாகக் கூறி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இராமேசுவரம், ஜெகதாப்பட்டினம் மீனவர்கள் 54 பேர் அந்த நாட்டின் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இராமேசுவரம் மீனவர்கள் சுமார் 4 ஆயிரம்பேர் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தை நேற்று முன்தினம் தொடங்கினர்.

இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்ட மீனவர்களையும், அவர்கள் சென்ற படகுகளையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, இராமேசுவரம் மீனவர்கள் சுமார் 4 ஆயிரம் பேர் காலவரையறை யற்ற வேலை நிறுத்தத்தை தொடங் கினர். இத னால் 800 இற்கும் மேற்பட்ட படகுகள் துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

முன்னதாக இது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் மீனவ சங்கத்தலைவர்கள் என்.ஜே. போஸ், எமரிட், ஜேசுராஜா, சகாயம், தெட்சிணாமூர்த்தி உட்பட இராமேசுவரம் பகுதியைச் சேர்ந்த 11 மீனவ சங்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதச் செய்தி

## மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மோடிக்குத் தமிழக முதலமைச்சர் கடிதம்

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் 54 பேரையும் விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு தமிழக முதலமைச்சர் பன்னீர் செல்வம் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று எழுதியுள்ள கடிதத்தில், பாரம்பரியமாக மீன் பிடிக்கும் பாக்கு நீரிணை அருகே தமிழக மீனவர்கள் அமைதியாக மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது, இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள 54 மீனவர்களையும் அவர்களின் 10 படகுகளையும் விடுவிக்க நிச்சயமாக பிரதமரின் நேரடி தலையீடு அவசியமானது. மீனவர்களை விடுவித்தால் மட்டுமே இருநாட்டு மீனவர்கள் இடையிலான பேச்சு அர்த்தமுள்ளதாக இருக்கும்என்றும், மீனவர்களை விடுவிக்க இலங்கை அரசை உடனடியாக தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு வெளியுறவுத்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றும், அக்கடிதத்தில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை தமிழக மற்றும் இலங்கை மீன வர்களிடையே இன்று சென்னையில் பேச்சு நடைபெறவுள்ள நிலையில், அதில் சுமுகத் தீர்வு எட்டப்படும் என்ற எதிர்பார்ப்பு மீனவர்களிடையே உள்ள நிலையில், இந்த சம்பவம் தமிழக மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் அந்த கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

கெட்ட உள்நோக்கத்தோடு கூறப்படும் ஓர் உண்மை ஆயிரம் பொய்களை விட மோசமானதாகும். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சர்வதேச விசாரணையைத் தடுக்கவே தேசிய அரசு அமைக்கப்பட்டுள்ளது

ரணிலின் நரி மூளையும் மைத்திரியின் யானை மூளையும் சேர்ந்து இலங்கையில் தேசிய அரசை நிறுவியுள்ளது. தேசிய அரசு அமைக்கப்பட்டதும் அதனை முதலில் வரவேற்றவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்பதை இங்கு நோக்குதல் அவசியம்.

தேசிய அரசை அமைத்ததன் மூலம் மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய ஆதரவாளர்களாக இருந்த முன்னாள் அமைச்சர்களுக்கு அமைச்சுப் பதவி கிடைத்துள்ளது.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருக்கிறார்.

ஆக, மைத்திரி ஜனாதிபதி; ரணில் பிரதமர்; ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்ந்தவர்கள் அமைச்சர்கள் என்ற வகையில் எதிர்க்கட்சி இல்லை என்பதாகப் பாராளுமன்ற நிலைமை மாற்றப்பட்டுள்ளது.

இத்தகையதொரு அமைப்பை ஏற்படுத்திய பெருமை மைத்திரியையும், ரணிலையுமே சாரும். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்தவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கமாட்டோம் என்று ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும் சுவட்டாகச் சொல்லியிருக்க வேண்டும்.

ஆனால் அப்படி எதுவும் சொல்லாமல், மகிந்தவின் ஆதரவாளர்களுக்கு- தேர்தலில் மைத்திரியை தோற்கடிக்க கடும் பிரயத்தனம் செய்தவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

அதாவது தமிழ் மக்கள் வாக்களிக்காவிட்டால் மைத்திரி ஜனாதிபதியுமில்லை, ரணில் பிரதமரும் இல்லை என்ற சூழ்நிலையே இருந்திருக்கும். எனினும் தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கிவிட,

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷவுக்குப் பக்கபலமாக இருந்த முன்னாள் அமைச்சர்களுக்கு மந்திரிப் பதவியைக் கொடுத்து தேசிய அரசை அமைத்துள்ளார்.

இவ்வாறு தேசிய அரசை அமைப்பதன் ஊடாக இலங்கை மீதான சர்வதேச விசாரணையைத் தடுப்பதே நோக்கமாகும்.

சர்வதேச விசாரணை இடம்பெற்றால், அது இலங்கைக்கு அவமானம் என்று கூறியவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. ஆக, சர்வதேச-விசாரணையைத் தடுத்து நிறுத்த சிங்கள இனம் ஒன்றுசேர்ந்து-ஓரணியில் திரண்டு தீட்டிய மிகப்பெரும் திட்டமே தேசிய அரசாகும்.

சர்வதேச விசாரணை இடம்பெற்றால் அது மகிந்தவுக்கும் அவரது சகாக்களுக்கும் ஆபத்து என்பதுடன் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறும் சர்வதேசம் அழுத்தம் கொடுக்கும்.

அந்நிலையில் அந்த அழுத்தத்தை நிறைவேற்ற வேண்டி வரும் என்பதால், சர்வதேச விசாரணையைத் தடுப்பதே ஒரேவழி என சிங்கள அரசியல் தலைமைகள் நினைத்து ஓரணியில் திரண்டுள்ளன.

அட, தேசிய அரசை அமைப்பதில் மகிந்த ராஜபக்ஷவுக்கும் காத்திரமான பங்கு இல்லாமலா போகும்?

இனி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைமை கிடைக்கும் வாய்ப்பு உண்டு என்று சொல்லப்படுகின்றது.

எங்களை எதிர்க்க அவர்கள் ஒன்று சேர்ந்தால் நாங்கள் தானே அவர்கள் எதிர்க்கும் கட்சி. இம்... என்ன நடக்கப் போகுது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# சுதந்திரமாகச் செயற்பட அரசு அனுமதிக்க வேண்டும்

## மனித உரிமை ஆர்வலர்கள் கோரிக்கை

(கொழும்பு)

சுதந்திரமாக செயற்படுவதற்கு கடந்த அரசாங்கம் விதித்திருந்த தடையை நீக்குமாறு இலங்கை மனித உரிமை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சுதந்திரமான முறையில் செயற்படுவதனை தடுக்கும் நோக்கில் கடந்த கால அரசாங்கம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்திருந்தது என இலங்கை மனித உரிமைகள் பாதுகாவலர் மற்றும் எழுத்தாளர் ருக்கி பெர்ணான்டோ குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த கட்டுப்பாடுகளை புதிய அரசாங்கம் கலைவதன் மூலம் கருத்துக்களை சுயாதீனமான முறையில் வெளிப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என இலங்கை மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் அமைப்புக்கள் கையெழுத்திட்டு கோரிக்கை விடுத்துள்ளன.

மனித உரிமை செயற்பாட்டாளர் ருக்கி பெர்ணான்டோ மற்றும் இன்னொருவரும் கடந்த வருடம் மார்ச் மாதம் 16-ம் திகதி பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டமை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலும் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

மேலும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு எதிர்ப்பு போராட்டங்களையடுத்து கடந்த வருடம் மார்ச் மாதம் 19-ம் திகதி விடுதலை செய்யப்பட்டனர்.

அத்துடன் ருக்கி பெர்ணான்டோவின் வெளிநாட்டு பயணங்கள், கருத்து சுதந்திரம் ஆகியவற்றிற்கு கடந்தகால அரசாங்கம் தடைவிதித்திருந்தது.

அதுமாத்திரமல்லாது, சில சிங்கள தேசியவாத குழுக்களும், சில ஊடகங்களும் அவரின் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை தடுக்கும் வகையில் தேசத்துரோகி, தீவிரவாதி ஆதரவாளர் என முத்திரை பதித்தன.

இது தொடர்பில் அவரின் சட்டத்தரணி, சட்டமா அதிபர் திணைக்களத்தில் அறிக்கையொன்றையும் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தற்போதும் மனித உரிமைகள் மற்றும் ஊடக சுதந்திரங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றை நீக்குவதற்கு புதிய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-11)

## பட்டப் பகலில் தங்க நகை திருட்டு

(கரணவாய்)

வீட்டில் யாரும் இல்லாத சமயம் பட்டப்பகலில் வீட்டின் கூரையை பிரித்திறங்கிய திருடர்கள் தாலிக்கொடி உட்பட 14 பவுண் நகை மற்றும் 46 ஆயிரம்ரூபா பணம்ஆகியவற்றை கொள்ளையடித்துக் கொண்டு சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கும் பி.ப 2 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் அல்வாய் கிழக்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வீட்டில் வசிக்கும் இருவரும் கல்லூரி ஆசிரியர்கள். அவர்கள் இருவரும் பாடசாலை சென்ற சமயம் திட்டமிட்டு மேற்படி திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

தாலிக்கொடி, ஒரு சோடி வளையல், ஒரு மோதிரம் மற்றும் 46 ஆயிரம் ரூபாய் பணமும் களவு போயுள்ளது.

களவு தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன்தேடுதல் வேட்டை நடத்தினர். களவு தொடர்பில் நேற்று இரவு வரை யாருமே கைது செய்யப்படவில்லை. (எ-60)

## 'ஆவிகளுக்கு அமைச்சுப் பதவி'

## முன்னாள் அமைச்சர் கிண்டல்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்த அலைந்து திரியும் சில ஆவிகளுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கி தேசிய அரசாங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பான்பெல பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அலைந்து திரியும் சில ஆவிகளுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கி தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்து அரசாங்கத்தின் பதவிக்காலத்தை ஒரு வருடத்திற்கு நீடித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க என்னையும் அழைத்தார். ஆடைகளை அணிந்து கொண்டு அப்படியான அமைச்சு பதவிகளை பெற முடியாது.

தற்போது அமைச்சு பதவிகளை ஏற்றுள்ள சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் சாப்பிடுவதற்கு மட்டுமே வாய் திறக்க முடியும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக அவர்களால் வாயை திறக்க முடியாது.

மறுபுறம் நாட்டை உருவாக்கிய மகிந்த ராஜபக்ஷவும் துரோகம் இழைக்க முடியாது எனவும் முன்னாள் அமைச்சர் ஏக்கநாயக்க குறிப்பிட்டுள்ளார்.(எ-11)

## 'பீல்ட் மார்ஷலுக்கு கார்'

(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனத்தின் இலக்கமானது இதுவரை இலங்கை வீதிகளில் பயணித்த வாகனங்களில் காணப்படாத அடையாளத்துடன் கூடிய இலக்கமாக அது அமைந்துள்ளது.

வாகனத்தின் முன் பகுதியில் 5 நட்சத்திரங்களும் பின் பகுதியில் 5 நட்சத்திரங்களும் காணப்படுகின்றன.

பீல்ட் மார்ஷல் ஒருவரின் வாகனம் செல்கிறது என்பதை ஏனையோர் அறிந்து கொள்ளும் வகையில் விசேட அடையாளமாக இந்த நட்சத்திரங்கள் அதில் பொறிக்கப்பட்டுள்ளன.

எஸ். 400 என்ற பென்ஸ் கார் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அது ஐப்ரைட் ரக வாகனமாகும். வாகனத்தின் இலக்கம் யு.ஏ.555 ஆகும். காரின் விலை சுமார் 34 லட்சம் ரூபாய் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)


## மஹோற்சவ பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தாவடி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் கோவிலின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினெட்டுத்தினங்கள் இடம்பெறவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. [illegible]

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்




உங்கள் அனைவரையும் நான் ஆசீர்வதிக்கின்றேன்; தேவி உங்கள் இதயத்தில் எழுந்தருள்வாளாக! உங்கள் கைகளுக்கு எல்லையிலா வலிமை தருவாளாக! ஜெய்காளி, ஜெய்காளி, ஜெய்காளி! அவள் நிச்சயமாக இறங்கி வருவாள், மகா பலத்துடன் வெற்றி அனைத்தையும் கொண்டு வருவாள், உலகையே வெற்றி கொள்ளச் செய்வாள். அன்னை வந்து கொண்டிருக்கின்றாள். ஏன் பயம்? யாரிடம் பயம்? ஜெய்காளி, ஜெய்காளி! உங்கள் ஒவ்வொருவரின் நடையிலும் பூமி நடுங்கட்டும். ஜெய்காளி, ஜெய்காளி!மேலே மேலே செல்லுங்கள். முன்னேறுங்கள்.ஜெய்குரு! ஜெய் ஜெகதம்பா! ஜெகதம்பா!

நான் தேவியின் அடிமை. நீங்களும் தேவியின் அடிமைகள். நமக்கு என்ன அழிவு? என்ன பயம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ண கிரிக்கெட் 2015
# தென்னாபிரிக்கா-நியூசிலாந்து

ICC CRICKET WORLD CUP 2015



## முதலாவது அரையிறுதி

## இன்று பலப்பரீட்சை







உலக கோப்பை கிரிக்கெட் போட்டி தற்போது மிகவும் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

14 நாடுகள் பங்கேற்ற இந்தப் போட்டியில் கடந்த 15ஆம் திகதியுடன் 'லீக்' ஆட்டங்கள் முடிந்தன. இதன் முடிவில் இங்கிலாந்து, ஆப்கானிஸ்தான், ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, சிம்பாவே, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய அணிகள் வெளியேற்றப்பட்டன.

காலிறுதி கடந்த 18ஆம் திகதி தொடங்கி முடிந்தது. இதன் முடிவில் நடப்பு சம்பியன் இந்தியா, போட்டியை நடத்தும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய 4 நாடுகள் அரை இறுதிக்கு தகுதி பெற்றன. இலங்கை, பங்காளதேஷம, பாகிஸ்தான, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகள் காலிறுதியில் தோற்று வெளியேறின.

முதல் அரை இறுதி ஆட்டம் நியூசிலாந்தில் உள்ள ஆக்லாந்தில் இன்று நடைபெறவுள்ளது. இதில் நியூசீலாந்து-தென்னாபிரிக்கா அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இரு அணிகளும் சமபலம் பொருந்தியவை என்பதால் இந்த அரை இறுதி ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

மேலும் இரு அணிகளுமே இதுவரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது கிடையாது. முதல் முறையாக இறுதிப் போட்டியில் நுழைய கடுமையாக போராடுவார்கள் என்பதால் பரபரப்பாக இருக்கும்.

நியூசிலாந்து அணி 7ஆவது முறையாக அரை இறுதியில் விளையாடுகிறது. இதுவரை ஆடிய 6 அரை இறுதியில் தோற்று இருந்தது. 1975 இல் மேற்கிந்தியத்தீவுகளிடமும், 1979இல் இங்கிலாந்திடமும், 1992 மற்றும் 1999இல் பாகிஸ்தானிடமும், 2007 மற்றும் 2011 இல் இலங்கையிடமும் தோல்வி அடைந்தது.

தற்போது சொந்த மண்ணில் 26 ஆண்டுக்கு பிறகு நடைபெறும் போட்டியில் இறுதிப்போட்டிக்கு முதல் தடவையாக தகுதி பெற்றுவிட வேண்டும் என்ற ஆர்வத்தில் நியூசிலாந்து அணி திகழ்கிறது.

அதற்கு ஏற்றவாறு அந்த அணியும் இந்தப் போட்டித் தொடரில் சிறப்பாக விளையாடி வருகிறது. லீக் ஆட்டம் அனைத்திலும் வென்றது. இதில் அவுஸ்திரேலியாவுடன் மட்டும்தான் கடுமையாக போராடியது. ஏனைய அணிகளை நசுக்கியது. காலிறுதியில் மேற்கிந்தியத் தீவு அணியை அபாரமாக வீழ்த்தியது.

பட்டிங், பவுலிங், பீல்டிங் என அனைத்து துறைகளிலும் நியூசிலாந்து அணி சிறப்பாக இருக்கிறது. மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான காலிறுதியில் அந்த அணியின் தொடக்க வீரர் குப்தில் 237 ஓட்டங்கள் குவித்து உலக கோப்பையில் சாதனை படைத்தார். இந்த தொடரில் 498 ரன் குவித்துள்ளார். கப்டன் மக்கலம், வில்லியம்சன், டெய்லர், ஆண்டர்சன், எல்லியாட் போன்ற சிறந்த அதிரடி பட்ஸ்மன்களும் நியூசிலாந்து அணியில் உள்ளனர்.

பந்து வீச்சில் போல்ட் முதுகெலும்பாகவுள்ளார். அவர் 19 விக்கெட் கைப்பற்றி முதல் இடத்தில் உள்ளார். தென்னாபிரிக்கா பட்ஸ்மன்களுக்கு இவர் கடும் சவாலாக இருப்பார். இது தவிர சவுத்தி, வெட்டோரி போன்ற சிறந்த பவுலர்களும் உள்ளனர்.

தென்னாபிரிக்க அணி 3 ஆவது முறையாக அரை இறுதியில் ஆடுகிறது. 1992இல் மழை விதியால் இங்கிலாந்திடம் தோற்றது. 1999 இல் அவுஸ்திரேலியாவுடன் மோதிய பரபரப்பான ஆட்டம் 'டை'யில் முடிந்தது. சுப்பர் சிக்சில் அந்த அணியிடம் தோற்று இருந்த தால் இறுதிப் போட்டி வாய்ப்பை இழந்தது.

உலக கோப்பை போட்டியில் முதல் முறையாக நாக்அவுட்டில் வெற்றி பெற்ற டிவில்லியர்ஸ் தலைமையிலான தென்னாபிரிக்க அணி நியூசிலாந்தை தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு முதல் தடவையாக தகுதி பெறும் ஆர்வத்தில் உள்ளது.

தென்னாபிரிக்க அணி 'லீக்' ஆட்டங்களில் மேற்கிந்தியத்தீவுகள், அயர்லாந்துக்கு எதிராக 200 ஓட்டங்கள் வித்தியாசத்துக்கு மேல் வெற்றி' பெற்றது. அதே நேரத்தில் இந்தியாவிடம் மோசமான தோல்வியை தழுவியது. பாகிஸ்தானிடம் போராடி வீழ்ந்தது. காலிறுதியில் இலங்கை அணியை நசுககி தள்ளியது. இதனால் தென்னாபிரிக்கா அணி மிகுந்த நம்பிக்கையுடன் திகழ்கிறது.

டி வில்லயர்ஸ் அந்த அணி பட்டிங்கில் முதுகெலும பாகவுள்ளார். நியூசிலாந்து பவுலர்களுக்கு சிம்ம சொப்பணமாக திகழ்வார். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான அவரது ஆட்டம் மறக்க இயலாத ஒன்றாகும். இது தவிர ஹசிம் அம்லா, டுபெலிசிஸ், மில்லர், ரூசோ போன்ற சிறந்த பட்ஸ் மனகளும் அந்த அணி யிலுள்ளனர. வேகப்பந்தில் ஸ்டெய்ன், அபோட, மார்னே மார்கல், சிறப்பான நிலையில் உள்ளனர். இம்ரான் தாகீ ரின் அபாரமான சுழற்பந்து வீச்சு அந்த அணிக்கு கூடுதல் பலமாகவுள்ளது. அவர் 15 விக்கெட்டுகளை கைப் பற்றி உள்ளார். மேலும் டுமினியும் திறமையாய் வீசக் கூடியவர். அவர் இலங்கைக்கு எதிராக ஹட்ரிக் சாதனை படைத்தார்.

இரு அணிகளும் கடைசியாக மோதிய 5 போட்டிகளில் தென்னாபிரிக்கா 3:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இரு அணிகளும் சமபலத்துடன் காணப்படுவதால் இறுதிப் போட்டியில் நுழைய கடும் போட்டி இருக்கும். உள்ளூர் ரசிகர்களின் ஆதரவு நியூசிலாந்துக்கு கூடுதல் பலமே. அதே நேரத்தில் அது நெருக்கடியாகவும் மாறலாம். இதை தென்னாபிரிக்கா பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கும். இன்றைய போடடி இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். ஸ்டார் ஸ்போர்ட்ஸ் டெலிவிஷனில் இந்தப் போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படு கிறது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்




யாழ்ப்பாணம் பெனின்சுலா ரோட்டரக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள நிதி நிறுவனங்களுக்கிடையில் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் நெல்லியடி கொமர்ஷல் கிரடிட் நிறுவனம் வெற்றி பெற்றது. இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் கொமர்ஷல் கிரடிட் நிறுவனம் பெற்றது. வெற்றி பெற்ற அணிக்கு நல்லூர் ரோட்டரிக்கழகத்தின் 2015/2016 இதற்கான தலைவர் ஜனார்த்தனன் வெற்றிக்கேடயம் வழங்குவதையும் வெற்றி பெற்ற அணிகளுடன் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்கு...

தாகவிருந்தது. அதே போன்று ஏனைய அரசியல்வாதிகளும் பேச பழகினால் எமது நாடு 1948 ஆம் ஆண்டுகளில் இருந்தது போன்று ஆகிவிடும்.

ஏன் அவ்வாண்டை குறிப்பிடுகின்றேன் என நீங்கள் நினைக்க முடியும். அந்த கால கட்டத்தில் சிங்கப்பூரின் பிரதமர் லீ குவான் யூ கூறியிருந்தார். நான் விரைவில் சிங்கப்பூரினை இலங்கையாக மாற்றிக்காட்டுவேன் என கூறியிருந்தார். அந்த காலகட்டத்தில் இலங்கையை உலகத்தலைவர்கள் எவ்வாறு மதித்திருந்தார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு எனத் தெரிவித்தார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்திய ஊடகமொன்றுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனை கடுமையாக விமர்சித்து செவ்வியொன்றினை வழங்கியிருந்தார். இச்செவ்வியின் எதிரொலியாகவே முதலமைச்சரின் இப்பேச்சு அமைந்திருக்கலாம் என கூறப்படுகின்றது.

இதேவேளை குறித்த நிகழ்வின் போது முதலமைச்சர் விக்னேஸ்வரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கடைசிவரை கதைக்காமல் இருந்ததோடு பிரதமரை கண்டு கொள்ளாமலும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# ரயில் மோதிய...

பாணத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணம் செய்த ரயிலில் யாழ் பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் மேற்படி மாணவனை ரயில் மோதியது. இதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த குகதாசன் குகப்பிரியன் (வயது 18) என்ற மாணவனே படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருந்தார். இந்த நிலையில் நேற்றைய தினம் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. விபத்து இடம்பெற்ற குறித்த பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் பாதுகாப்பதற்கு காவலர்கள் இருப்பதற்கு தாம் ஏற்பாடு செய்து தருவதாக யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உறுதிமொழியளித்த போதிலும் இதுவரை அக் கடவையில் பாதுகாப்பதற்கு காவலர்கள் நியமிக்கப்பட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (٥-11)

# புதிய அரசின்...

களிடம் வாக்கு கேட்பதற்காக வந்திருந்தேன்.

இதற்கு பிறகு யாழ்ப்பாணத்திலே வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் மீளாய்வு செய்யும் கூட்டத்திற்கு வந்திருந்தேன்.

தற்போது மூன்றாவதாக காணிகள் வழங்குவதற்காக இங்கு வந்துள்ளேன். இங்கு பேசியவர்கள் தொடர்பில் நான் கவனமாக செவிமடுத்தேன். யுத்த காலத்தின் போதும் யுத்தத்தின் பின்னரும் காணிகள் தொடர்பாக பிரச்சினைகளினை அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த காணிப் பிரச்சினைகள் உலகத்திலே பல அரசியல் மாற்றங்களினை ஏற்படுத்தியுள்ளது. பல நாடுகளில் புரட்சிகள் கிளர்ச்சிகள் இக் காணிப்பிரச்சினையால்தான் ஏற்பட்டுக் கொண்டுள்ளன.

உள்ளவர்களிற்கும் இல்லாதவர்களிற்கும் இடையில் போராட்டம் ஏற்பட்டதும் இந்த காணிகளை அடிப்படையாக வைத்துத்தான். காணிப்பிரச்சினைகள் தொடர்பில் அரசியல்வாதிகளாகிய நாம் மிகவும் அவதானமாக ஆழமாக சிந்தித்து செயற்பட வேண்டும்.

யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட இழப்புக்கள் வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் கொழும்பிலும் ஏற்பட்டுள்ளன. ஆகவே நாம் புதிய அரசு என்ற வகையில் மக்களின் எல்லா பிரச்சினைகளினையும் தீர்த்து வைப்பதற்காகத் தான் செயற்பட்டுக் கொண்டுள்ளோம்.

எம்முடைய நடவடிக்கைகளில் சிலகுறைபாடுகள் காணப்படலாம். இருந்தாலும் கூட வேலைகளினை ஆரம்பிப்பது தான் மிக மிக முக்கியமான விடயம்.

எனவே அந்த குறைபாடுகளினை தீர்த்து வைப்பதற்காகத்தான் நாங்கள் அரசாங்கமொன்றினை அமைத்துள்ளோம். நாம் அரசியல்வாதிகள் என்ற வகையில் இவ்வாறான மேடைகளில் உரையாற்றிவிட்டுச் செல்கின்றோம்.

உங்களிற்கு பாரதூரமான பிரச்சினைகள் உண்டு என்பதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். அந்த பிரச்சினைகளினை தீர்த்து வைப்போம் என்ற நம்பிக்கை வைத்துத் தான் எனக்கு நீங்கள் வாக்களித்தீர்கள்.

நான் தெட்டத்தெளிவாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். எம்முடைய ஆட்சிக் காலத்தில் உங்கள் உள்ளத்தில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு தருவோம் என உறுதியாக கூறிவைக்க விரும்புகிறேன்.

எதிர்காலத்தில் இவ்வாறான மேடைகளில் வந்து மட்டும் உரையாற்றி விட்டு போக மாட்டோம். கிராமங்கள் தோறும் சென்று மக்களுடன் பேசுவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

உங்களுடைய பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு வழங்கி வைப்பதன் மூலம்தான் உங்களிடையே உள்ள சந்தேகத்தையும் பீதியையும் நீக்கி வைக்க முடியும்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு நான் கடந்த மாதத்திலே ஜனாதிபதி செயலணி ஒன்றினை உருவாக்கியிருக்கின்றோம். இந்த செயலணியினை வழிநடத்தி ஊக்கமளிப்பவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கதான்.

பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு ஆரம்பமாகத்தான் நாம் இவற்றை செய்கிறோம். இவை முடிவதற்கு சில காலம் தேவைப்படுகின்றது. நாங்கள் உங்கள் சொந்தக் காணிகளினை மீள அளிப்பது மாத்திரம் அல்ல வணக்கத் தலம் உட்பட அனைத்தையும் மீள நிர்மாணம் செய்து வழங்குவோம்.

நீங்கள் வாழ்வது கண்டி, மாத்தளை போன்ற இடங்களில் இல்லை. வறண்ட இடங்களில்தான். இங்குள்ள மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கும் தீர்வை ஏற்படுத்துவோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளினைத் தீர்ப்பதற்கு விசேட செயற்றிட்டம் ஒன்றினை ஆரம்பிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-4)

# இராணுவத்துக்கு தேவையற்ற காணிகள் கையளிக்கப்படும்

## சந்திரிகா தெரிவிப்பு

வடக்கில் உயர்பாதுகாப்பு வலயத்தியிலுள்ள இராணுவத்துக்கு தேவையற்ற அனைத்துக் காணிகளிலும் பொதுமக்கள் குடியேற்றப்பட்டு மீள்குடியேற்றம் பூரணப்படுத்தப்படும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உறுதியளித்தார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

வளலாய், வயாவிளான் ஆகிய பகுதிகளிலுள்ள 430 ஏக்கர் காணிகளை பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு வளலாய் பகுதியில் நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதியிடம் உரையாடிய போதே அவர் இந்த உறுதியை வழங்கியதாக மாவை எம்.பி கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, "உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவம் வைத்துள்ள காணிகளில் விவசாயச் செய்கையில் இராணுவத்தினர் ஈடுபடுவதுடன், ஹோட்டல்களும் நடத்தி வருகின்றனர் என்பதையும் சுட்டிக்காட்டினேன். விவசாயம் செய்கின்றமை மற்றும் ஹோட்டல்கள் கட்டுவதை இராணுவத்தினர் மறுத்துள்ளதாக சந்திரிகா குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஆராய்வதாகவும் அவர் கூறினார். மீள்குடியேற்றம் மேற்கொள்ளக் கூடிய அனைத்து பிரதேசங்களிலும் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படும் என்று கூறிய உறுதிமொழி நிறைவேற்றப்படும் என்று கூறினார். அத்துடன், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தோலகட்டி, வடமுனை, தென்முனை ஆகிய பகுதிகளுக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுவதாக அவருக்கு கூறினேன்.

மீள்குடியேற்ற அதிகார சபையின் தலைவர் ஹரிம் பீரிஸுடன் சென்று அவற்றை அவருக்கு காட்டுமாறு சந்திரிகா கூறினார். அதற்கிணங்க அந்த காணிகளை அவருடன் சென்று காட்டியதாக மாவை கூறினார். (எ-4)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

**நேர் கோடுகள் என்றும் வளைவதில்லை** என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 1.00 மணிக்கு யா/நாவற்குழி மகா வித்தியாலய மண்டபத்தில் கல்லூரி முதல்வர் திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வின் முதன் மை விருந்தினராக வட மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் குலவீரசிங்கம் செல்வன் கலந்து கொள்ளவுள்ளார். (٥-11)

# இந்தியன் வெல்ஸ் டென்னிஸ்; ஜோகோவிக் சம்பியன்



இந்தியன் வெல்ஸ் டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் நடைபெற்றது.

ஆண்கள் ஒற்றையருக்கான இறுதிப் போட்டியில் செர்பியாவைச் சேர்ந்த முதல் நிலை வீரரான ஜோகோவிக், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பெடரரை எதிர்கொண்டார்.

இதில் முதல் செட்டை ஜோகோவிக் 6-3 என எளிதாக கைப்பற்றினார். ஆனால், 2-வது செட்டில் பெடரர் கடும் நெருக்கடி கொடுத்தார்.

இதனால், ரை பிரேக்கர் வரை சென்ற 2-வது செட்டை 7-6 (7-5) என அவர் கைப்பற்றினார்.

ஆனால், பெடரரால் 3-வது செட்டில் ஜோகோவிக்கின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இறுதியில், ஜோகோவிக் 6-3, 6-7 (5-7), 6-2 என வெற்றி பெற்று சம்பியன் கோப்பையை கைப்பற்றினார். (க)

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் விஜயரட்ணம் (ஆச்சாரி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், உடுவில் மான்ஸ் பாடசாலை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் விஜயரட்ணம் (ஆச்சாரி) அவர்கள் 23.03.2015 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

அவரின் பூதவுடல் தற்காலிகமாக 24.03.2015 தொடக்கம் 25.03.2015 வரை யாழ்ப்பாணம் ஒட்டுமடம் எஸ்.இன்பம் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
தொலைபேசி: 0765534708, 0213210090

(9883)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வளலாயில் நேற்று நடைபெற்ற காணி கையளிப்பு நிகழ்வில் கலந்துகொண்ட அரசியல் பிரமுகர்களையும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் காணிப்பத்திரத்தை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# நாடாளுமன்றம் ஏப்பிரலில் கலைக்கப்படமாட்டாது

## ஜீவன் குமாரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் அமைக்கப் பட்டதை தொடர்ந்து அரசியல் சட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்து வதற்கு மேலதிகமாக கால அவ காசம் தேவை என்பதனால் எதிர் வரும்ஜூன் மாதம் பொது தேர்தலை நடத்துவதற்கான சாத்திய கூறுகள் இல்லை என தொழிலாளர் விவகா ரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரி வித்துள்ளார்.

அமைச்சரவையில் பதவியேற்ற தன் பின்னர் சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23-ம் திகதி பாராளுமன்றம் கலைக்கப் படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. அதற்கு முன்னர் நாங்கள் நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதற்காக மேற்கொள்ள வேண் டிய நடவடிக்கைகள் ஏராளமுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் 100 நாள் வேலைத்திட் டத்தில் உள்ளடங்கிய நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறைமையின் அதிகாரங் களை குறைத்தல் மற்றும் தேர்தல் முறைமையில் மாற்றம் உள்ளிட்ட பல காரியங்கள் நிறைவேற்றப் பட்டதன் பின்னரே பொது தேர்தல் நடத்துவதற்கான தினம் தீர்மானிக் கப்படும் என தொழிலாளர் விவகா ரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரி வித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் பதவி களை வழங்க காட்டிய அக்கறை 19-வது திருத்தச் சட்டத்தின் மீதும் இருந்திருந்தால், அந்த திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு முடிக் கப்பட்டிருக்கும் என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநா யக்க குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரல் 23 ஆம் திகதி நாடாளு மன்றம் கட்டாயம் கலைக்கப்பட வேண்டும் எனவும் இவ்வாறான விகடத்தனமான நாடாளுமன்ற ஆட்சி நாட்டுக்கு தேவையில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி யின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் அவர் இதனை தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சர் கள், பிரதியமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்றுள்ள னர். பழைய முறைக்கு அமைய சிறப்புரிமைகளுக்காக மீண்டும் இந்த பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுகாலவரை வழங்கிய ஆணைக்கு முரணானது. ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உடனடியாக மக்களுக்கு இதனை தெளிவுப் படுத்த வேண்டும் எனவும் அனுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை ஜூன் மாத இறுதி பகுதியில் பொது தேர்தல் நடை பெறும் என நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையிலுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டு ஜூன் மாத இறுதிபகுதியில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என நிதிய மைச்சர் தெரிவித்துள்ளார். (எ-11)

## வடக்கு கிழக்கின் சுதந்திரமே...

வியிலேயே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

இலங்கையில் ஆட்சியமைத்த கடந்த கால அரசாங்கங்கள் தனி மனித சுதந்திரத்தை பாதிக்கும் வகையில் செயற்படவில்லை. ஏனெனில் சுதந்திரத்தை பாது காப்பது நாட்டு தலைமைகளின் கடப்பாடு என அவர் தெரிவித் தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமும் தனி மனித சுதந்திரத்தை பாதிக் கும் வகையில் செயற்படவில்லை, யுத் தம் நிறைவு பெற்று 4 வரு டங்களுக்குள் வட, கிழக்கு பகுதி யில் சுதந்திரத்தை நாங்கள் உறுதி செய்தோம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர்களுக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கியதினா லேயே முன்னாள் ஜனாதிபதி தோல்வியுற்றார், அதாவது அவர் களுக்கு முழுமையான சுதந் திரத்தை வழங்கியிராவிட்டால் அவர்கள் நாட்டில் நடைபெறு கின்ற தேர்தல்களில் சுதந்திர மான முடிவுகளை எடுத்திருக்க மாட்டார்கள் அல்லவா? என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கேட்டுள்ளார்.

வட, கிழக்கு மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆதிக் கம் செய்வதற்கு அனுமதியளித் திருந்தமையினாலேயே அரசியல் ரீதியாக அரசாங்கமும், எதிர்க்கட்சியும் குறித்த மக்களின் இதயங்களை வெல்வதற்கு தவறியது.

யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் பத்திரிகையாளர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டா ளர்கள் காணாமல் போனார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின் றேன், யுத்தம் நிறைவுற்ற பின் னர் யாரும் காணாமல் போக வில்லை

லலித், குகன் ஆகியோர் ஏன் கைது செய்யப்பட்டார்கள் என்று கூட எனக்கு தெரியாது எனவும் இவை அரசியல் நோக்கங்களுக் காகவே முக்கியத்துவம் பெற் றன.

வடக்கில் இடம்பெற்ற காணா மல் போதல்கள், கொலைகள் அனைத்திற்கும் எங்கள் அரசாங் கமே காரணம் என குற்றம் சுமத் தப்பட்டது, இவ்வாறான சம்பவங் கள் இடம்பெற்றதன் பின்னரே புலனாய்வு பிரிவினருக்கு இவை குறித்து தெரியவந்தது, தனிப்பட்ட சம்பவங்களையும், பொதுவான சம்பவங்களாக பார்ப்பதற்கு மக்கள் முயற்சிப்பதினாலேயே யுத்தத்திற்கு முன்னரும், பின்ன ரும் ஏற்பட்டுள்ள சுதந்திரத்தை ஒப்பிட்டு பார்க்குமாறு கேட்டு கொண்டேன்.

நாட்டில் இடம்பெற்ற கடத்தல் களுக்கும், புலனாய்வு பிரிவின ருக்கும் இடையில் எவ்வித தொடர் பும் இல்லை.

புலனாய்வு அமைப்பினருக்கு அவ்வாறான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு திறனில்லை எனும் ஊடகங்களின் கருத்துக் களை திருத்தி கொள்ள வேண் டும், ஆனால் நாங்கள் ஊடகங் களின் பின்னால் செல்லவும் இல்லை புலனாய்வு பிரிவினருக்கு அதற்கான அனுமதியும் இல்லை என அவர் குறிப்பிட்டார். (எ-11)

## எதிர்க்கட்சித்தலைவர்...

முடியும்.

முக்கியமான தருணங்களி லேயே தேசிய அரசாங்கங்கள் அமைக்கப்படும். இரண்டாம் உலக போரின் போது பிரித்தானிய பிரத மர் வின்ஸ்டன் சேர்ச்சில் அவ்வா றான தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தினார். எனினும் இலங்கை யில் 1987 ஆம் ஆண்டு இந்திய ஆக்கிரமிப்பு நடந்த போதும், சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட போதும், புலிகளை தோற் கடித்த சந்தர்ப்பத் திலும் ஏற்படாத தேசிய அரசாங் கம், எந்த காரணத் திற்காக தற் போது அவசரமாக ஏற்படுத்தப்பட் டது.

எதிர்க்கட்சி என்ற வகையில், அரசாங்கத்திற்கு எதிராக செயற்படு வதன் மூலம் தமது அரசியல் நிலைப் பாடுகளுக்கு இடத்தை ஏற்படுத்திக் கொள்ள ஜே.வி.பிக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது அந்த கட்சி பெற்றுள்ள வெற்றி.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைப்பது அவர்களுக்கு வெற்றி யென்பது போல், அரசாங்கத்தின் மீதான எதிர்ப்புகளை பகிர்ந்து கொள் வதன் மூலம் ஐக்கிய தேசியக் கட் சிக்கும் இது வெற்றியாகும்.

இவர்கள் அனைவரும் வெற்றி பெற்றுள்ள நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தோல்வியடைந் துள்ளது.

1956 ஆம் ஆண்டு தல்துவே சோமராம ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் ஸ்தாபகர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவை சுட்டுக்கொன் றார். 2015 ஆம் ஆண்டு மேலும் ஒரு சோமராமவினர் பண்டாரநாயக் கவை அரசியல் ரீதியாக கொலை செய்துள்ளனர்.

தல்துவோ சோமராமவுக்கு சட் டம் தண்டனை வழங்கியது. இந்த சோமராமாக்களுக்கு எதிர்வரும் தேர்தலில் தண்டனை கிடைக்கும் எனவும் உதய கம்மன்பில குறிப் பிட்டுள்ளார்.

இதேவேளை தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டமையினால் பாராளு மன்றத்தில் அடுத்த எதிர்க்கட்சித் தலைவர் யார்? என்ற கேள்வியும், தேசிய அரசாங்கத்தின் பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் தற்போதைய எதிர்க்கட்சித் தலை வர் நிமல் சிறிபால டி சில்வா தொடர்ந் தும் எதிர்க்கட்சித் தலைவராக தொடர் வாரா என்ற கேள்வியும் எழும்பி யுள்ளது.

நேற்றுமுன்தினம் வழங்கப்பட்ட அமைச் சரவை நியமனங்களை அடுத்து பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகளாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பும், ஜே.வி.பியும் விளங்கு கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் ஜே.வி.பியை விடவும் அதிக உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றது.

எனவே எதிர்க்கட்சித் தலை வராக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் நியமிக் கப்படலாம் என எதிர்பார்க் கப்படு கிறது.

2010ஆம் ஆண்டு இடம்பெற்ற பொது தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு 12 ஆசனங்களும் ஐக்கிய தேசிய கட்சிக்கு 60 ஆசனங் களும்ஜனநாயக கட்சிக்கு 07 ஆசனங் களும் கிடைக்கப்பெற்றமை குறிப் பிடத்தக்கது.

## அம்பலத்துக்கு வந்தது...

மரும் ஜனாதிபதிக்கு அருகருகாக உட்கார்ந்து கொண்டனர். எனினும் அப்போதும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளா மலும் பேசிக் கொள்ளாமலும் இருந்தனர்.

இலங்கையில் ஜனாதிபதி தேர் தல் நடைபெற்று முடிந்ததன் பின்னர் 10-ம் திகதி கொழும்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவை சந்தித்த போது மஹாநாயக்க தேரர்களிடம் வடக்கிலி ருந்து படையினரை விலக்கமாட்டேன் எனக் கூறப்போவதாக பிரதமர் ரணில் கூறிய விடயம் தொடர்பாக முதலமைச்சர் வெளி யில் பேசியிருந்தார்.

அந்தப் பேச்சும் யாழ்.வந்த பாதுகாப்பு அமைச்சர் படை யினருக்கு நிலத்தில் முகாமை அமைக்காமல் ஆகாயத்திலும், கடலிலுமா? அமைப் பார்கள் என எழுப்பிய கேள்வியை அடுத்தே படையினர் வெளியேற்றம் தொடர்பில் புதிய அரசின் நிலைப்பாடு மாறிவிட்டதா? என கேட்பதற்காகவே முதலமைச்சர் பிரதமருடன் பேசிய விடயத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

அன்று தொடங்கிய நிழல் யுத்தம் பின்னர் பிரதமர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரிக்கப்பார்கிறார் என முதலமைச்சர் வெளிப்படையாக குற்றம்சாட்டும் நிலை வரை சென்று பொது நிகழ்வில் கூட ஒரு வரையொருவர் பார்த்துக் கொள்ளா மலும், பேசிக்கொள்ளாமலும் இருக்கும் நிலைக்குச் சென்றுவிட்டிருக் கின்றமை இங்கே குறிப்பிடத்தக்கது. (எ-11)

SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions
கனடா
Express Entry Visa
தொழில்வாய்ப்புடன்
நிரந்தர குடியுரிமை
Doctors, Engineers முதல் =>
மேசன், தச்சுத் தொழிலாளர் வரை
150க்கு மேற்பட்ட தொழில் நிலைகளுக்கு
180,000*க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்
கனேடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ
இணையத்தளத்தின் மூலம் புள்ளி அடிப்படையில்
உங்கள் விண்ணப்ப தகைமையை மதிப்பீடு
செய்து, கனேடிய முகவர் ஊடாக
விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்
100% பாதுகாப்பான ஏற்பாடு
FREE Assessment
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள்
பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
www.sikaram.lk
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 00 11
(C-442)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org